REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 23 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன්

92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 96 | Tuesday 23, April, 2024 | 08 பக்கங்கள் | 50/-

**வெள்ளம், மழையால்**

## 68,131 ஹெக்டேயர் மரக்கறி செய்கைகள் பாதிப்பு



பெரும்போகத்தில் (2023, 2024) பெய்த கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக, 68 ஆயிரத்து 131 ஹெக்டேயர் மரக்கறிச் செய்கைகள், சேதமடைந்ததாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மொத்தமாக பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் சுமார் 06

## அமைச்சர் விஜயதாசவுக்கு கட்சி நடவடிக்கை எடுக்கும்

**பொதுஜன பெரமுன அறிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



பொதுஜன பெரமுன கட்சியின் அங்கத்தவராகவிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக பதவியேற்றுள்ள அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தொடர்பில், கட்சி உரிய தீர்மானம் மேற்கொள்ளும் என பொதுஜன பெரமுன எம்.பி. திஸ்ஸ குட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினராக பதவி வகித்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக பதவியேற்றுள்ளமை பாரதூரமான விடயமென்றும், அவரது கட்சி 06

## கடனாளர்களுடன் இணக்கப்பாடு எட்டப்படுமென நாணய நிதியம் நம்பிக்கை



தனியாருடன் தொடர்புபட்ட கடன் மறுசீரமைப்பில் பின்னடைவுகள் காணப்பட்ட போதிலும், கடனாளர்களுடன் விரைவில் இணக்கப்பாட்டை எட்ட முடியும் என்று சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ கடனாளர்களுடனான பேச்சுவார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட சாதகமான முன்னேற்றமான விடயங்களை, சர்வதேச நாணயத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்கள பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன் சுட்டிக்காட்டியுள்ளார். ஊக்கத்துடன் செயற்படக் கூடிய வகையில் பேச்சுவார்த்தை அமைந்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் கடனாளர்களுடனான தற்போதைய இணக்கப்பாட்டு பேச்சுவார்த்தையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஈடுபாடு இல்லாத போக்கை எடுத்துக் காட்டுவதாகவும் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன் குறிப்பிட்டார். இவ்விடயத்தில் சர்வதேச 06

## இலங்கை, இந்திய கலாசார உறவுகளின் புதிய அத்தியாயமாக ஸ்ரீ ராமாயணப் பாதை






இந்திய-இலங்கை சமய மற்றும் கலாசார தொடர்புகளில் புதிய அத்தியாயத்தை திறக்கும் வகையில், நாட்டின் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்படவுள்ளது. இதை நோக்கமாக் கொண்டு, உலகின் அதிநவீன தொழில்நுட்ப மற்றும் சுற்றுலா முறைமையுடன் கூடிய Sri Ramayan Trails (ஸ்ரீ இராமாயணப் பாதை) திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் (21) கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

# சவால்களை எதிர்கொண்ட பின்னர் அரசாங்க வருமானங்கள் அதிகரிப்பு

## சுங்கம், கலால் வரி மற்றும் தேசிய இறைவரித்திணைக்களம் மூலம் 834 பில்லியன் ரூபா வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

*லோரன்ஸ் செல்வநாயகம்*



கஷ்டமான சவால்களை எதிர்கொண்ட சில வருடங்களின் பின்னர் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில், எதிர்பார்க்கப்பட்டதை விட அரச வருமானம் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், இக்காலப் பகுதியில் நாட்டிற்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் இலங்கை சுங்கம், கலால்வரி மற்றும் தேசிய இறைவரித் திணைக்களம் ஆகியன மூலம் 834 பில்லியன் ரூபா வருமானமாக பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட அந்நிறுவனங்களில் அரசாங்கம் 787 பில்லியன் ரூபாவை எதிர்பார்த்திருந்த போதும், அதனைவிட 6 வீத வருமானம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டின் முதலாம் காலாண்டில் தேசிய இறைவரித் திணைக்களம் 381 பில்லியன் ரூபாவுக்கு அதிகமான வருமானத்தைப் பெற்றுள்ளது. அந்தவகையில் 13% அதிகரித்த வருமானம் கிடைத்துள்ள நிலையில் அது 430 பில்லியன் ரூபாவாக காணப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுங்கத்திணைக்களத்தின் மூலம் 353 பில்லியன் ரூபாவும் கலால் வரித் திணைக்களம் மூலம் 96% அதிகரித்த வருமானத்தையும் பெற முடிந்துள்ளதுடன் அவை 51 பில்லியனாக காணப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில் அரசாங்கமானது 4106 பில்லியன் ரூபாவை வருமானமாக எதிர்பார்த்துள்ளது. 06

## பந்தயத்திற்காக உபயோகப்படுத்தப்படும் வாகனங்களை பதிவு செய்ய நடவடிக்கை

**அமைச்சரவை பத்திரத்தை தயாரிக்குமாறு அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

கார் ஓட்டப் பந்தயத்திற்காக உபயோகப்படுத்தப்படும் வாகனங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு தேவையான பரிந்துரைகளை உள்ளடக்கும் அமைச்சரவைப் பத்திரத்தை தயாரிப்பதற்கு அந்த திணைக்களம் தயாராகி வருகிறது. முழு நாட்டையும் கவலைக்குள் ஆழ்த்தியுள்ள தியத்தலாவ பொக்ஸ்ஹில் கார் ஓட்டப்பந்தயத்தின்போது இடம்பெற்றுள்ள அனர்த்தத்தின் பின்னர் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்கு இணங்கவே 06

## பாவனைக்கு உகந்ததென உறுதிப்படுத்தப்பட்ட அரிசியே பாடசாலைகளுக்கு விநியோகம்

Presidential secretariat PSWFPC Partnership Secretariat for WFP Co-operation

பாவனைக்கு உகந்ததென உறுதி செய்யப்பட்ட அரிசி மாத்திரமே, பாடசாலை போஷாக்குத் திட்டத்திற்காக வெயங்கொடை களஞ்சியத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்படுவதாக ஜனாதிபதி அலுவலகத்தின் உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புக்கான செயலகம் அறிவித்துள்ளது. அரச பகுப்பாய்வுத் திணைக்களம், வைத்திய ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் அறிக்கைகளை மையப்படுத்தியே, மேற்படி அலுவலகம் இந்தப் பரிந்துரைகளை வழங்கியுள்ளது. மனித 06



ஆட்பதிவு திணைக்களத்தின் நுவரெலியா மாவட்டத்துக்கான கிளைக் காரியாலயம் நேற்று (22) திங்கட்கிழமை நுவரெலியா லேடி மெக்லம் டிரைவ் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இதைத் திறந்து வைத்தார். நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுசாமி இராதாகிருஸ்ணன், சீ.பி.ரட்ணாயக்க, மருதுபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். *(நுவரெலியா தினகரன் நிருபர்)*

## ஈரான் ஜனாதிபதி ரைசி நாளை நாட்டுக்கு வருகிறார்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை (24) நாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

514 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில், ஈரான் அரசாங்கத்தின் கடனுதவியின் கீழ் 2011 ஆம் ஆண்டு உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பாகிஸ்தானுக்கு 06

## ஈஸ்டர் தாக்குதல் விவாதம் நாளை சபையில் ஆரம்பம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதத்தை நாளை புதன்கிழமை (24) முதல் மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்துள்ளதாக பிரதிப் பொதுச் செயலாளரின் பிரதானி சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

இதன்படி, புதன்கிழமை (24), வியாழன் (25) மற்றும் வெள்ளிக்கிழமை (26) ஆகிய நாட்களில் இவ் விவாதம் நடைபெறவுள்ளது. 06

## எலுமிச்சம் பழத்தின் விலை அதிகரிப்பு



ஒரு கிலோ எலுமிச்சம் பழத்தின் விலை 1200 ரூபா வரை உயர்ந்துள்ளது. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் (21) ஒரு கிலோ எலுமிச்சம் பழத்தின் விலை,1000 ரூபா தொடக்கம் 1200 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது. கடந்த சில வாரங்களுக்கு முன், ஒரு கிலோ எலுமிச்சம் 06

## தொழிலாளர் சார்பாக தீர்மானம் எடுக்காவிடின் போராட்டம் வெடிக்கும்

**பெருந்தோட்ட கம்பனிகளை எச்சரிக்கிறார் செந்தில் தொண்டமான்**



பெருந்தோட்டக் கம்பனிகளுடன் நாளை (24) நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக தீர்மானம் எட்டப்படாவிட்டால் போராட்டங்கள் வலுப்பெறுமென, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் ஆளுநருமான செந்தில் தொண்டமான் எச்சரிக்கை 06

## குற்றவாளிகளுடன் தொடர்புள்ள பொலிஸாருக்கு கடும் நடவடிக்கை

**கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களை அழிப்பதற்கு புத்தளத்தில் இடம்**



போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றவாளிகளுடன் தொடர்பு வைத்துள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான சட்டம் நடைமுறைபடுத்தப்படும் என, பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் இடம்பெற்ற நிகழ்வில் 06

## யுக்திய என்ற போர்வையில் திருட்டுக் கும்பல் கைவரிசை

**90 இலட்சத்திற்கும் அதிகமான சொத்துக்கள் கொள்ளை**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

யுக்திய நடவடிக்கை எனத் தெரிவித்து பொலிஸ் சீருடைக்கு ஒத்த சீருடையில் குழுவொன்று, நுரைச்சோலை நாவற்காடு பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து 90 இலட்சம் ரூபா பெறுமதியான 06

## விஜயதாசவின் பெயரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க மைத்திரி தரப்பு தீர்மானம்

*லோரன்ஸ் செல்வநாயகம்*

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பெயரை, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாக கட்சியின் 06

## முச்சக்கர வண்டிகளுக்கு மீட்டர் பொருத்த அறிவிப்பு

பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல், கட்டண அறவீட்டுக்கான மீற்றர் பொருத்தப்பட வேண்டும் என்று மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது. இவ்வாறான முச்சக்கரவண்டிகளின் மேல் இடது மூலையில் பயணிகள் பார்க்கக் கூடிய வகையில், கட்டணத்தை காட்டும் மீட்டரை பொருத்துவது கட்டாயம் எனவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கரவண்டி 06

## தேசிய அடையாள அட்டை: நாற்பது வயதுக்கு மேலானோருக்கு அறிவிப்பு




பிறப்புச்சான்றிதழ் இல்லாத காரணத்தால் இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெற முடியாதுள்ள நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு விஷேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி எதிர்வரும் ஜூன் (30) வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. 06

## தியத்தலாவை கார் பந்தய விபத்து; கைதான இருவருக்கு விளக்கமறியல்

**பண்டாரவளை நீதவான் நீதிமன்றம் உத்தரவு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



தியத்தலாவை நரியாகந்தை கார் ஓட்டப் பந்தயத் திடலில், இடம்பெற்ற விபத்துக்கு காரணமான பந்தயக்காரர்கள் இருவரையும் எதிர்வரும் (30) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்திருந்த இவ்விரு பந்தயக்காரர்களும் வைத்தியசாலையில் சிகிச்சை 06

# தர்கா நகர் பிராந்திய வைத்தியசாலையை பார்வையிட சாகல ரத்நாயக்க நேரடி விஜயம்

## கைவிடப்பட்ட நிர்மாண பணிகளை ஆரம்பிப்பதாகவும் உறுதி

(பேருவளை விசேட நிருபர்)





தர்கா நகர் பிராந்திய வைத்திய சாலை புனர் நிர்மாணப் பணிகளை பார்வையிட ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க அண்மையில் தர்கா நகருக்கு விஜயம் செய்தார்.

ஐ.தே.கவின் தர்கா நகர் இணைப் பாளர்களான சாமில் அப்பாஸ் மற்றும் நிப்ராஸ் மன்சூர் ஆகியோரின் அழைப்பில் தர்கா நகருக்கு வருகை தந்த பாதுகாப்பு ஆலோசகர், 2017 ஆம் ஆண்டு ஆரம்பமான தர்கா நகர் பிராந்திய வைத்தியசாலை புனர் நிர்மாணப் பணிகள் இதுவரை பூர்த்தியாக்கப்படாத நிலையிலுள்ளதையும் அவர் பார்வையிட்டதோடு 2024 ஆம் ஆண்டுக்குள் நிர்மாணப் பணிகளை முழுமையாக பூரணப்படுத்த உதவுவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இதன்போது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி இஹ்ஸான் ஹரீஸ், தாதியர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை சங்க தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் நயீம், வைத்தியசாலை சங்க உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை முன்னாள் வேட்பாளர்களும் இதன்போது சமுகமளித்திருந்தனர். தர்கா நகர் மற்றும் சுற்றுப்புறத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் இவ்வைத்தியசாலையை சூழவே வாழ்ந்து வருவதென்பதும் குறிப்பிடத்தக்கது.

# அயோத்தி ஸ்ரீ ராமர் கோவில் மூத்த சுவாமிகளால் இலங்கை குருமார்கள் ஆசீர்வாதம்





முன்னாள் பிரிடிஷ் யூரோப்பியன் கவுன்சில் பாராளுமன்றத்திற்கான முன்னாள் இலங்கைக்கான சிறப்பு தூதர் தக்கூர் நிரஞ்சன் தேவா ஆதித்யாவின் ஏற்பாட்டில் அயோத்தி ஸ்ரீ ராமர் கோவில் மூத்த சுவாமிகள் கோவிந் தேவ் கிரிஜி மகாராஜ் ஹோட்டல் கலதாரியில் சர்வமத தலைவர்கள் மற்றும் இலங்கை நாட்டின் பிரமுகர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது சுவாமிகளால் இலங்கை குருமார்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

# நீரில் மூழ்கி பாடசாலை மாணவன் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் ஆராச்சிக்கட்டுவ கட்டுபத மஹாவெவயில் குடும்பத்துடன் நீராடச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி (20) உயிரிழந்துள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஆராச்சிக்கட்டுவ, நல்லதரன் கட்டுவ, இலக்கட்டுவ பகுதியைச் சேர்ந்த 08 வயதுடைய தினேத் சத்சர என்ற பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

தாயின் சகோதரியும், அவரது இரண்டு பிள்ளைகள் மற்றும் மற்றுமொரு அயலவர் ஆகியோருடன் நீராடுவதற்காக சென்ற போதே குறித்த மாணவன் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விமானப்படை தளபதிக்கு அமெ. பல்கலை கௌரவிப்பு



அலபாமா மேக்ஸ்வெல் விமானப் படை தளத்தில் அமைந்துள்ள வான் பல்கலைக்கழகத்தின் சர்வதேச மரியாதை பட்டியல் (International Honour Roll) அறிமுக விழா கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது அந்தப் பல்கலைக் கழகத்தில் பயின்ற 21 முன்னாள் சர்வதேச மாணவர்கள் கௌரவப்படுத்தப்பட்டனர். இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச வான் பல்கலைக்கழகத்தினால் சர்வதேச மரியாதை பட்டியல் (International Honour Roll) கௌரவமளிப்பு அந்த பல்கலைக் கழகத்தில் உயர் கல்வியை கற்ற இராணுவ மற்றும் முதன்மை சிவில் பிரிவில் கடமையாற்றும் வெளிநாட்டு அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட கட்டளை இல்லாத அதிகாரிகளுக்கு வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

சீனன்கோட்டை பள்ளிச்சங்க ஏற்பாட்டில்

# காஸாவுக்கு நிதி சேகரிக்கும் பணி ஆரம்பம்; பலர் உதவி

அஜ்வாத் பாஸி

பேருவளை, சீனன்கோட்டை பள்ளிச்சங்கம், சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்துடன் இணைந்து பலஸ்தீன் காஸா போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களுக்கு உதவி வழங்கும் நோக்கில் நிதி திரட்டும் பணியை சீனன்கோட்டை பகுதியில் முன்னெடுத்து வருவதாகவும் அதற்கு மக்கள் பூரண ஆதரவை வழங்கி வருவது மகிழ்ச்சி தருவதாகவும் சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச்செயலாளர் ஷிஹாப் ஹாஜியார் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள எமது சகோதரர்களான காஸா மக்கள் இன்று பல்வேறு இழப்புகளை சந்தித்துள்ள நிலையில் அவர்களின் துயர்துடைக்கும் நோக்கில் இத்திட்டத்தை எமது பள்ளிச்சங்கம் முன்னெடுத்துள்ளதென தெரிவித்த இணைச்செயலாளர், இதற்கு பூரண உதவி ஒத்தாசைகளை வழங்க எமது ஊரின் CGJTA நிறுவனம் உட்பட ஊர் மக்கள், தனவந்தர்கள், இளம் சிறார்கள் சிறந்த முறையில் இத்திட்டத்திற்கு உதவி ஒத்தாசை வழங்க முன்வந்துள்ளதை அவர் பாராட்டியுள்ளார். அந்தவகையில், எதிர்வரும் 27ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சீனன்கோட்டை பத்தை மாணிக்க சந்தையை மையமாகக் கொண்டு நிதி சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பத்தையிலிருந்து ஆரம்பித்து பிரதேசத்தின் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று நிதி திரட்ட உத்தேசித்துள்ளதாகவும் இதில் அனைவரும் கைகோர்க்குமாறும் இணைச்செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

# பொலிஸ் கான்ஸ்டபிள் செலுத்திய கார் மோதி விபத்து

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் கான்ஸ்டபில் ஒருவர் செலுத்திய கார் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பலத்த காயத்திற்குள்ளாகி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரம் விஜேபுர மற்றும் மற்றும் கல்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே காயத்திற்குள்ளாகியுள்ளனர்.

தஹியாகம சந்தியில் இருந்து ஆணி தொழிற்சாலைக்கு டீ.எஸ். மாவத்தையூடாக பயணித்துக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளுக்கு பின்னால் சென்ற கார் மோதியுள்ளது.

குறித்த விபத்து தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட போது காரின் சாரதி சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமையாறுபவர் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


## INVITATION FOR BIDS (IFB)

DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this **grant** to payments under the Contract for Contract for Work as described below.
2. The **Chairman, Provincial Project Procurement Committee (PPPC)** on behalf of the **Valikamam South Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work as described below.

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VSPS/2024/PT2/02 | Balance Work on Vehicle Park in Maruthanarmadam Public Market | 31.37 | C5 or above Building Construction | 105 | 470,000.00 | 8-Sep-2024 | 6-Oct-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam (T.P No: 0212240017, Fax No: 0212240327)** and inspect the bidding documents at **Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam** from **23-Apr-2024** until **12-May-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam** from **23-Apr-2024** until **12-May-2024** between **09:00 Hrs to 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.8,500.00**.The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project (LDSP), Department of Local Government (NP), Elders' Home Complex, Kaithady** on or before **14.00** Hrs on **13-May-2024**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project (LDSP),**
**Department of Local Government (NP),**
**Elders' Home Complex,**
**Kaithady.**
**23-Apr-2024**


அம்பாறை மாவட்டத்தில் கடும் வரட்சி

# குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தல்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர்ப் பாவனையாளர்கள் குடிநீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம். முஸாஜித் தெரிவித்தார். தொடர்ச்சியாக வரட்சி காலநிலை நிலவுவதால் பிரதான நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்து வருகின்றது.

எனவே குடிநீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும், வரட்சி நிலை தொடருமானால் நீர்த் துண்டிப்பு தொடருமெனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, நீர் பாவனையாளர்கள் குடிநீரை வேறு தேவைகளுக்கு பாவிக்காமல் குடிப்பதற்கு மட்டும் நீரை பயன்படுத்துமாறும் நீரை தாங்கியில் சேமித்து சிக்கனமாகவும், வீண் விரயமின்றியும் பாவிக்குமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை, சில பிரதேசங்களில் குடிநீருக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியகங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.


## மூடும் திகதியை நீடித்தல்

**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**

**BID No.: 048/T/2023**

DEVELOPING OF A CAD MODEL FOR THE EXISTING TERMINAL BUILDING FOR ENGINEERING SERVICES AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE

2024 மார்ச் 01 ஆம் திகதியன்று மேலேயுள்ள விலைமனு தொடர்பாக டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விடயத்திற்கு மேலானது.

மேலேயுள்ள விலைமனுவின் மூடும் திகதியானது 2024 மே 08 ஆம் திகதியன்று புதன்கிழமை வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்திலிருந்து எந்தவொரு வேலை நாளிலும் 2024 மே 8 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம்**
**மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**


# வாகனம் மோதுண்டதில் இரு மாடுகள் உயிரிழப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகில் கட்டாக்காலியாக திரிந்த மாடுகள் மீது வாகனம் மோதுண்டதில் இரு மாடுகள் உயிரிழந்துள்ளன. விபத்து சனிக்கிழமை இரவு வேளையில் இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுவதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு மற்றும் கல்முனை பிரதேசங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதால் பொது மக்களும், வாகன சாரதிகளும் பலவிதமான இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இவ் விபத்து சம்பந்தமாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மகாநாயக்க தேரர்களிடம் ஜனாதிபதி நேரில் ஆசிர்வாதம்





மல்வத்து மற்றும் அஸ்கிரி பீடங்களின் மகாநாயக்க தேரர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஞாயிற்றுக்கிழமை (21) பிற்பகல் சந்தித்து, ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

முதலில் மல்வத்து மகா விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மல்வத்து பீட மகாநாயக்க வண, திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல மகா நாயக்க தேரரை தரிசித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார். பின்னர் சிறு கலந்துரையாடலிலும் அவர் ஈடுபட்டார்.

இச்சந்திப்பில் மல்வத்து பீட அனுநாயக்க வண, திம்புல்கும்புரே விமலதம்ம தேரரரும் கலந்து கொண்டு, ஜனாதிபதிக்கு பிரித் பாராயணம் செய்து ஆசிர்வதித்தார். இதையடுத்து, அஸ்கிரி மகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அஸ்கிரி பீட மகாநாயக்க வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரை சந்தித்தும் கலந்துரையாடினார். முதியங்கனை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண, முருந்தெணியே தம்மரத்ன தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் ஜனாதிபதிக்கு பிரித் பாராயணம் செய்து ஆசி வழங்கினர். இச்சந்திப்புக்களில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோனும் கலந்து கொண்டார்.

## வசத் சிரிய – 2024' போட்டிகள்: பெருமளவானோர் விண்ணப்பம்

ஏப்ரல் 27 இல்,போட்டிகள் ஆரம்பம்

கொழும்பு காலிமுகத்திடல் ஷங்ரிலா பசுமை மைதானத்தில் நடைபெறவுள்ள 'வசத் சிரிய 2024' சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகளில் பங்கேற்க பலர் விண்ணப்பித்துள்ளனர்.

புத்தாண்டு போட்டிகளான அழகன்,அழகி, மரதன் ஓட்டம் மற்றும் மிதிவண்டி சவாரி ஆகியவற்றில் பங்கேற்க பலர் விண்ணப்பித்துள்ளனர். பல்வேறு மாகாணங்களிலிருந்தும் இப்போட்டிகளில் பங்கேற்க இளைஞர் யுவதிகள் முன்வந்துள்ளனர்.

உள்நாட்டு கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் பல அம்சங்களை உள்ளடக்கிய அரச பிரிவு, திறந்த பிரிவு மற்றும் விருந்தினர் பிரிவு ஆகிய 03 பிரிவுகளின் கீழ்,இந்த 'வசத் சிரிய' புத்தாண்டு போட்டிகள் நடைபெறும். அழகர் அழகி போட்டிகளில் பங்கேற்க 18-30 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவுதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.வசத் சிரிய புத்தாண்டு அழகர்அழகி போட்டிகளில் முதலிடம் பிடிக்கும் வெற்றியாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் இரண்டாம் இடம் பெறுபவருக்கு 75 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

06

## ஜனாதிபதியாக ரணில் இருக்கும் வரை ஒருவருக்கும் பட்டினி வாழ்வு கிடையாது



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் வரை, நாட்டில் ஒருவர் கூட பட்டினியில் இருக்க இடமளிக்கப் படாதென, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசாங்க நிருவாகத்திற்கு பங்களித்த ஜனதா விமுக்தி பெரமுன உட்பட அனைவரும் வாங்கிய கடனை அடைத்து, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றி வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கூறினார். குறைந்த வருமானம் பெறும் 29 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ இலவச அரிசி வழங்கும் தேசிய வேலைத்திட்ட நிகழ்வு காலி சமனல விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு குறிப்பிட்டார்.

## இலங்கை மக்களிடம் மன்னிப்புக்கோரல்

**நாராபொத்த, ஹிந்துகொல்லவில் அமைந்துள்ள விற்பனை நிலையத்தின் உரிமையாளரான ரன்கொத் துரயலாகே ரசிக்க குமார குணவர்த்தன ஆகிய நான்,**

மேற்படி விற்பனை நிலையத்தில் சீனி, உப்பு, கொழுப்பிற்காக நிறக்குறியீட்டை மேற்கொள்ளாது பிஸ்கட் தூள் விற்பனை செய்தல், விநியோகித்தல், உணவில் அடங்கியுள்ள பொருட்களில் சர்வதேச இலக்கத்தை குறிப்பிடாது பிஸ்கட் தூள் விற்பனை செய்தல், விநியோகித்தல், உணவின் பொதுப்பெயரை ஒரு மொழியேனும் குறிப்பிடாது பிஸ்கட் தூள் எனும் உணவை விற்பனை செய்தல், விநியோகித்தல், உணவில் அடங்கியுள்ள பொருட்களை குறிப்பிடாது பிஸ்கட் தூள் எனும் உணவை விற்பனை செய்தல், விநியோகித்தல், உற்பத்தி திகதி இன்றி பிஸ்கட் தூள் எனும் உணவை விற்பனை செய்தல், விநியோகித்தல் காலவதியாகும் திகதி இன்றி பிஸ்கட் தூள் எனும் உணவை விற்பனை செய்தல், விநியோகித்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக பிலேஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இல. 500/2024/PHI இன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு முற்றாக ஒப்புக்கொண்டதால் கௌரவ நீதிமன்றம் 2024.03.26 திகதிக்கு எனக்கு ரூபா பத்தாயிரம் (ரூ.10,000/-), ரூபா மூவாயிரம் (ரூ. 3,000/-), ரூபா மூவாயிரம் (ரூ. 3,000/-) ரூபா பத்தாயிரம் (ரூ. 10,000), ரூபா பத்தாயிரம் (ரூ. 10,000), ரூபா பத்தாயிரம் (ரூ. 10,000) என முறையே தண்டத் தொகை விதிக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிறு 2024.04.21
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5452
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,956,216.00
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 4 6 9 0 4 7

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 027
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 9 0 4 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3694
சீட்டிழுப்பு திகதி 2024.04.21
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 74,130,568.16
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 39 41 58 79
விசேட எழுத்து F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 58706

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1800
2024.04.21
47716
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 430,683,974.00
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 11 42 52 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.04.21
சீட்டிழுப்பு இலக்கம் 0278
ஆங்கில எழுத்து Z
L7 எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 4 6 5 8 9 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ 28,672,207.28

ராசி சுப பலன்
திகதி 2024.04.21
சீட்டிழுப்பு இலக்கம் 761
செவ்வாய் அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,596,648.88
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 07 17 53 54
தனயோக இலக்கம் 48054
நாளுக்கான விதி எண் 26

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1482
2024.04.21
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 89,184,798.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 20 25 33 78
விசேட எழுத்து G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 76741

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)**

## விலைமனு அறிவித்தல் – தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் (NCB)

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | பெயர் மற்றும் ஒப்பந்த இல. | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனு பிணைத் தேவைப்படுத்தல்கள் | விலைமனு முன்னோடிக்கூட்டம் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| சேவை | | | | | |
| 1. | இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கான முதலீட்டு உள்வாங்கல் முகாமைத்துவ முறை. ஒப்பந்த இல.: SLTDA/ICT/S/NCB/ICM/2023/09 | 12,500.00 | 650,000.00 | 2024 மே 8 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு | 2024 மே 20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |

2. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தகைமை தகவுத்திறனுக்கான வியாபாரப் பதிவை உரித்தான துறையில் கொண்டிருத்தல் வேண்டும்.
3. 2024 மே 08 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-03, காலி வீதி, 80 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 1 ஆம் மாடியிலுள்ள தலைவரின் சபை அறையில் விலைமனு முன்னோடிக்கூட்டம் நடைபெறும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பதில் கடமையாற்றும் உதவி பணிப்பாளர் 0112426800 நீடிப்பு 305, 277 ஆகிய தொடர்பிலக்கங்களினூடாகவும் **sagarikaw@srilanka.travel / sltdaddproc@srilanka.travel** என்ற இலத்திரனியல் அஞ்சல் முகவரியூடாக பெறுமதிக்கான பதில் கடமையாற்றும் உதவி பணிப்பாளரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
5. 2024 ஏப்ரல் 24 ஆம் திகதியிலிருந்து 2024 மே 20 ஆம் திகதியன்று வரையும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகைக்கான பணக்கொடுப்பனவு துண்டை sltdaddproc@srilanka.travel/ **sagarikaw@srilanka.travel** ஆகிய மின்னஞ்சல் முகவரியூடாகவும் விண்ணப்பதாரியின் தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளத்திலிருந்தும் அல்லது மின்னஞ்சல் மூலமாகவும் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று வழங்கப்படும்.
6. மீளளிக்கப்படாத கட்டணமான 12,500 ரூபாவின் பணக்கொடுப்பனவானது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை வங்கி, கூட்டுரு கிளை, 7119413 என்ற வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். (கவனத்திற்கொள்க: பண வரவு துண்டில் வைப்பீட்டாளர்களின் விபரங்கள் மற்றும் வரவுவைக்கப்படுவதன் நோக்கமானது ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' என குறிக்கப்படல் வேண்டுமென்பதுடன்) விலைமனுவுடன் மேற்குறிப்பிட்டுள்ள துண்டின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பது கட்டாயமானதாகும். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏனைய பணக்கொடுப்பனவுகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
7. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் நகல்பிரதியுடன் விலைமனுவை மூடும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு (4 ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன எழுதப்படல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 4 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டமூலத்தின் இலங்கை அரசாங்கத்தின் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் இதற்கு பின்னராக வர்த்தமானி அறிவித்தல்கள் (பிசிஏ 3) இற்கு அமைவாக பிரசுரிக்கப்படும் சான்றிதழ்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுப் பிணையானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் விலைமனுவின் செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் 28 நாட்கள் வரையும் ஒவ்வொரு விலைமனுக்கோரல் ஆவணத்திலும் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதாகவுமிருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்கள் ஒவ்வொரு விலைமனுக்கோரல் ஆவணத்திலும் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
12. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையுடன் மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டிலுள்ள வேறு ஏதாவது நிறுவனத்தின் ஊழியரொருவர் அல்லது கம்பனியொன்றின் மற்றும்/ அல்லது தனிநபரொருவர் நெருக்கமான குடும்ப உறவுமுறையை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை கொண்டிருக்க மாட்டார்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலும், SLTDA ஆனது எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதென்பதுடன் SLTDA ஆனது விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரருக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

## பெறுகை அறிவித்தல்

**கொலன்னாவ மாநகர சபை**

**தனியார் பாதுகாப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல் – 2024**

கொலன்னாவ நகர சபையின் தலைமையகத்திற்கு மற்றும் மீதொட்டமுல்ல வாகன நிறுத்துமிடத்திற்கு கீழ்க்காணும் பாதுகாப்பு அதிகாரிகளின் சேவையை 2024.06.01 முதல் 2025.05.31 வரை பெற்றுக் கொள்ளும் முகமாக தகைமையுள்ள நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- கனிஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் நால்வருக்கு (ஒரு நாளைக்கு)
- பிரதம பாதுகாப்பு அதிகாரிகள் ஒருவருக்கு (ஒரு நாளைக்கு)

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் நிறுவனங்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

- அரசில் பதிவு செய்த பாதுகாப்பு கம்பனியாக இருத்தல்/ ஊழியர் சேமலாப நிதியில் பதிவு செய்திருத்தல்.
- பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக அரச பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் உரித்துரிமை மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ்
- இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட காலம் பாதுகாப்புச் சேவையை தொடர்ந்து நடத்திச் செல்லல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல்.

குறித்த விண்ணப்பங்கள் மற்றும் பெறுகை நிபந்தனைகளை ரூ.2000.00 காசாக அல்லது காசோலை மூலம் “செயலாளர், கொலன்னாவ நகர சபை” இற்கு செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பெறுகைப் பத்திரங்கள் விநியோகித்தல் 2024.04.24 முதல் 2024.05.15 வரை அலுவலக நேரங்களில் இடம்பெறும்.

பெறுகைப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024.05.15 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு “செயலாளர், கொலன்னாவ நகர சபை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம்.

பெறுகை ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்த பின்னர் உடனடியாக பெறுகைப் பத்திரங்கள் திறக்கப்படும்.

**செயலாளர்,**
**அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**எச்.எம். நெலும் குமாரி,**
**கொலன்னாவ நகர சபை,**
**0112572329**

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 14

**குறள் தரும் சிந்தனை**

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை

புகழுக்குரிய இல்வாழ்க்கை அமையாதவர்கள், தம்மைப் பழித்துப் பேசுவோர் முன்பு தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் குன்றிப் போய் விடுவார்கள்.

# அதிக உஷ்ண காலநிலையை அலட்சியம் செய்யலாகாது!

நாட்டில் தற்போது கடும் உஷ்ண காலநிலை நிலவிக் கொண்டிருக்கின்றது. வருடத்தின் ஆரம்பப் பகுதியில் அதிக உஷ்ண காலநிலை நிலவுவது வழமையாகும். குறிப்பாக மார்ச், ஏப்ரல் காலப்பகுதியில் இந்நாட்டில் உஷ்ண காலநிலை உச்சநிலையை அடையும். அதற்கு இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுப்பதும் ஒரு காரணமாக கருதப்படுகிறது.

அதேநேரம் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் தற்போதைய அதிகரித்த உஷ்ணத்திற்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. அதுவே விஞ்ஞானிகளின் கருத்தாகும்.

வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரிப்புக்கு அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகள் மாத்திரமல்லாமல் வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளும் தங்களது இயலுமைகளுக்கு ஏற்ப பங்களிக்கவே செய்கின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளின் பங்களிப்பு மிக அதிகமாகும். அதன் விளைவாக விளைவாக தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முழு உலகமும் முகம்கொடுக்கின்றது. அவற்றில் இலங்கை எதிர்கொண்டுள்ள உஷ்ண அதிகரிப்பும் அடங்க முடியும். அதனால்தான் உள்நாட்டு விஞ்ஞானிகள் தற்போதைய வழமைக்கு மாறான உஷ்ண அதிகரிப்புக்கு காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பங்களித்திருக்கின்றன என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களமானது, தற்போதைய சூழலில் அடுத்துவரும் இரண்டொரு தினங்களுக்கு வடக்கு, வடமேல், வடமத்திய, மேல், சப்ரகமுவ, கிழக்கு, தெற்கு, ஆகிய மாகாணங்களிலும் மொனறாகலை மாவட்டத்திலும் அதிகரித்த உஷண் நிலையை மனித உடலால் உணராக் கூடியதாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறது.

தற்போதைய கடும் உஷ்ணம் காரணமாக மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் தாக்கங்களுக்கும் முகம்கொடுத்து இருக்கின்றனர். 'வெயில் வாட்டி வதைக்குதே...' என்ற வார்த்தையைப் பரவலாகக் கேட்க முடிகிறது. அந்தளவுக்கு தற்போதைய உஷ்ணத்தின் தாக்கத்தை உணர முடிகிறது.

இந்த உஷ்ண அதிகரிப்பை சாதாரணமாக நோக்கவும் முடியாது. அதன் விளைவாக உடலில் நீரிழப்பு ஏற்படலாம். அத்தோடு கடும் வெப்பநிலையினால் அதிர்ச்சி நிலைக்கு கூட முகம்கொடுக்க நேரிடலாம். இதன் விளைவாக திடீரென மயக்க நிலைகள் கூட ஏற்படலாம். இவற்றின் விளைவாக உடலின் அவயவங்களில் செயலிழப்புகள் ஏற்படக் கூடிய அச்சுறுத்தலும் நிலவவே செய்கின்றது. சில சமயம் உயிராபத்துக்கும் கூட முகம்கொடுக்க நேரிடலாம்.

அதன் காரணத்தினால்தான் இக்காலப்பகுதியில் போதியளவில் அடிக்கடி தண்ணீரைப் பருகுமாறும், கடும் உஷ்ணம் நிலவும் போது திறந்தவெளிகளில் நடமாடுவதையும் தொழில்களில் ஈடுபடுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் நிழலான இடங்களில் ஒய்வு எடுத்துக் கொள்ளுமாறும் மருத்துவர்கள் ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

உண்மையில் இந்த ஆலோசனைகளும் அறிவுரைகளும் காலத்திற்கு மிகவும் அவசியமானவை. உஷ்ண காலநிலை நிலவும் தற்போதைய சூழலில் இவற்றைக் கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும். அவை அசிரத்தையோ காட்டக்கூடிய அறிவுரைகள் அல்ல. அத்தோடு கடும் உஷ்ண காலநிலை குறித்து கவனயீனமாக நடந்து கொள்ளவும் கூடாது.

கடும் உஷ்ணத்தின் விளைவாக ஏற்படக்கூடிய தாக்கங்களையும் பாதிப்புக்களையும் மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பவற்காகவே இந்த அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. அதனால் இந்த சிபாரிசுகளையும் அறிவுரைகளையும் கவனத்தில் எடுத்து நடப்பதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

ஆன போதிலும், அதிகரித்த உஷ்ணத்தின் விளைவாக ஏற்படக்கூடிய தாக்கங்கள், பாதிப்புக்களைப் பெரும்பாலானவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். சிலர் அறிந்திருந்தும் உஷ்ணத்தின் தாக்கங்கள் குறித்து கவனயீனமாக நடந்து கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். இன்னும் சிலர் உஷ்ணத்தின் பாதிப்புக்களையும் மருத்துவர்களின் அறிவுரைகளையும் அறிந்திருந்த போதிலும், அடிக்கடி சிறுநீர் கழிக்க நேரலாம் எனக் கருதி அடிக்கடி போதியளவில் நீரைப் பருகுவதையும் தவிர்த்துக் கொள்கின்றனர். ஆனால் இந்த அனைத்து செயல்களும் முற்றிலும் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை. அறிவுரைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாகவே உஷ்ணத்தின் தாக்கத்தையும் பாதிப்புக்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆகவே வளிமண்டலத்தின் உஷ்ணம் அதிகரிப்பதற்கு பங்களிப்பதைத் தவிர்த்துக் கொள்வதிலும் அதிகரித்த உஷ்ணத்திற்கு ஈடுகொடுப்பதற்கு ஏற்ப மருத்துவர்களின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் எடுத்து நடப்பதிலும் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அப்போது அதிகரித்த உஷ்ண காலநிலை ஒரு தாக்கமாகவோ பாதுப்பாகவோ இருக்காது எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் எவரையுமே அரசு கைவிடப் போவதில்லை



## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகிக்கும் (2024) வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரை

நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களையும் வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தில் அரசாங்கம் யாரையும் கடந்து செல்லவோ, விட்டுவிடவோ போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டு மக்கள் அனைவரும் பாகுபாடின்றி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டின் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தின் நன்மைகள் அனைவருக்கும் பகிரப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வெலிமடை அம்பகஸ்தோவ பொதுவிளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம்(21) நடைபெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி நிவாரணம் வழங்கும் (2024) தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், முழுநாட்டையும் உள்ளடக்கிய குறைந்த வருமானம் பெறும் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு மாதாந்தம் பத்து கிலோ அரிசி வழங்கப்படும்.

பதுளை மாவட்டத்தின் பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 191,548 பயனாளி குடும்பங்கள் அரிசி மானியம் பெறத் தகுதி பெற்றுள்ளன. ஆயிரம் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வின் அடையாளமாக நேற்றுமுன்தினம் 25 பயனாளிகளுக்கு ஜனாதிபதியின் கைகளால் அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது. இந்நிகழ்வில் மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாவது:

"இன்று இந்நாட்டு மக்கள் தமிழ், சிங்கள புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களில் புத்தாண்டை கொண்டாடுவது பற்றி நினைத்துக்கூட பார்க்க முடியாத சூழ்நிலையில் நாடு இருந்தது.

நான் 2022 தமிழ், சிங்களப் புத்தாண்டை கம்புருகமுவ பிரதேசத்தில் கழித்தேன். அங்குள்ள எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக மக்கள் இரவுவரை காத்திருப்பதைக் கண்டேன். ஆட்சியாளர்களை மக்கள் கடுமையாக குற்றம் சாட்டினர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து இன்று நாடு அடைந்திருக்கும் முன்னேற்றத்தை சிலரால் நினைத்துக்கூட பார்ப்பது கடினமாக உள்ளது.

முன்னர் இந்த நாட்டின் அரசாங்கங்கள் ஒரு கட்சிக்கு உரிதானதாகவே இருந்தன. இது தவிர இரண்டு அல்லது மூன்று கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்கும். ஆனால் இந்த அரசு அப்படியானதல்ல. ஐக்கிய தேசியக் கட்சியில் நான் மட்டுமே இருந்தேன். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி என அனைவரும் அரசாங்கத்துடன் இணைந்தனர். அந்த அரசாங்கம் நாட்டின் தேவைக்காகவே உருவாக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என சிலர் கூறினர்.

எப்படியிருந்தாலும், நாட்டு நலனுக்கான நோக்கங்களை வெற்றிகரமாக செயல்படுத்தினோம். அதற்காக பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்று, சுற்றுலா வணிகம் எதிர்பாராத வகையில் வளர்ச்சியடைந்து வருகிறது. அதன் மூலம் மக்களின் வருமானமும் அதிகரித்துள்ளது. மேலும், கிராமப்புற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான விரிவான திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். அந்த பணம் இன்று அரச மற்றும் தனியார் துறைகளில் சம்பள உயர்வு மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

நாட்டின் வளர்ச்சியின் பயனை அனைவரும் பெற வேண்டும். எனவே, அஸ்வெசும திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பலனை மூன்று மடங்காக உயர்த்த நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அத்துடன் தமிழ், சிங்கள, புத்தாண்டு காலத்தை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு தலா 10 கிலோ அரிசியை இம்மாதம் மற்றும் அடுத்த மாதம் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.





நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகிறது. இன்று, சுற்றுலாத்துறை மூலம் கிராமங்களுக்கு பணம் கிடைக்கிறது. மேலும், விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. வலுவான ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குவதே இதன் நோக்கம்.

மேலும், பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தியுள்ளோம். அந்த மக்களுக்கு காணி வழங்குவதற்கான தீர்மானம் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 20 இலட்சம் பேருக்கு இலவச காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கொழும்பில் உள்ள 50,000 குடியிருப்புகளின் உரிமையை அந்த மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேளையில் நாம் அரசியல் ரீதியாக பிளவுபடக்கூடாது. நாம் பிரிந்திருந்தால் இன்று நாட்டில் இந்த முன்னேற்றத்தை காண முடியாது. கட்சி அரசியலை மறந்து முன்னேற வேண்டும். அத்துடன், இந்த ஊவா பிரதேசத்தின் அபிவிருத்திக்காக சில பாரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்." இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றுகையில், "குறைந்த வருமானம் பெறுவோருக்கு இன்று வழங்கப்படும் இருபது கிலோ அரிசியின் பலன் இந்த மக்களுக்கு மிகவும் பெறுமதியானது. ஆனால் இந்தப் பலன்களை நீண்ட கால அடிப்படையில் மக்களுக்கு வழங்கக்கூடாது. ஜனாதிபதியின் பொருளாதாரத் திட்டத்தின்படி, மக்கள் மீண்டும் எழுந்து நிற்பதற்கு அதிக காலம் எடுக்காது.

மக்களின் கைகளுக்கு அதிக வருமானத்தை கொண்டு வரும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி தற்போது செயற்பட்டு வருகின்றார். அதனை உலகில் யதார்த்தமாக்கி வருகிறார். இதன் விளைவாக, இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் வங்குரோத்தடைந்த நாட்டை மீட்டெடுக்க முடிந்தது. மேலும், மக்களின் சிரமமான வாழ்க்கைச் சூழலிலிருந்து காப்பாற்ற 15,000 ரூபா 'அஸ்வெசும' மூலம் வழங்கப்பட்டது. மேலும், மக்களுக்குத் தேவையான காணிகள் 'உறுமய' திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இவை வாய்ப்பேச்சிற்கு வழங்கிய வாக்குறுதிகள் அல்ல. கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி விதைத்த யதார்த்தம் இதுதான்" என்று தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க உரையாற்றுகையில், "பதுளை மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு அரிசி நிவாரணம் வழங்க ஆரம்பித்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இருபது கிலோ அரிசி வழங்க ஒருவருக்கு 6000 ரூபா செலவிட வேண்டியுள்ளது. ஆனால், வாழ வழியின்றியுள்ள மக்களுக்கு இந்த சலுகைகளை வழங்குவது பாராட்டுக்குரியது. நாடு வங்குரோத்தடைந்த போது, நாட்டைக் கைப்பற்றும் தலைவர் எவரும் இருக்கவில்லை. தலைவர்கள் நாட்டை விட்டு வெளியேறிய போது ரணில் விக்கிரமசிங்க அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் .

நான் இருபத்தேழு வருடங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் நாட்டை பொருளாதார ரீதியாக விடுவித்த தலைவருக்கு எனது ஆதரவை தெரிவிக்கவே ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டேன். இனிமேல் மக்கள் கட்சிகளுக்கு வாக்களிக்க முன்வர மாட்டார்கள். எனவே, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் இருந்து ரணில் விக்கிரமசிங்க மூன்று இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளால் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கின்றோம். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இந்த நாட்டை மக்கள் உங்களிடம் ஒப்படைப்பது உறுதியானது" என்று தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் உரையாற்றுகையில், "இந்த நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்ட ஜனாதிபதியின் பணி பாராட்டத்தக்கது. வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய நாட்டை உருவாக்க ஜனாதிபதியால் முடிந்தது. அவருக்கு இருக்கும் வெளிநாட்டு தொடர்புகளின் காரணமாக, நாட்டின் பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வரவும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சலுகைகளை வழங்கவும் முடிந்தது.பதுளை மாவட்டத்தில் இருந்து ஜனாதிபதியின் வெற்றி நிச்சயம் என்றே கூற வேண்டும்" என்றார்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.எல். முஸம்மில், இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சன் தெனிபிட்டிய மற்றும் ஊவா மாகாண அரசியல் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச். எஸ்.சமரதுங்க, பதுளை மாவட்ட செயலாளர் பண்டுக அபேவர்தன, ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# சம்மாந்துறை பிரதேச குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகம்

2023ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் நாட்டில் நிலவிய மிக மோசமான பொருளாதார நெருக்கடியினால் பாதிப்புக்குள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஊட்டச்சத்து மட்டத்தைப் பேணுவதற்கான தேசிய வேலைத் திட்டத்தின் கீழ், சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்கான பிரதான நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் முஹம்மது ஹனீபா தலைமையில் கோரக்கல் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாதிப்புக்குள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் முழுநாட்டையும் உள்ளடக்கும் விதமாக சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்கு தலா 10 கிலோ நாட்டரிசியை இரண்டு மாத காலத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கம்நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வேலைத்திட்டம் தேசிய ரீதியாக ஜனாதிபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

இதன்கீழ், சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் 12000 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாவுல்லாஹ் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரமவும், விசேட அதிதிகளாக சம்மாந்துறை மஜ்லிஸ் ஹுரா தலைவர் எம்.ஐ.எம். அமீர் (நளிமி), அம்பாறை மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பீ.அனீஸ், உதவி பிரதேச செயலாளர் யூ.எல்.அஸ்லம் (எல்.எல்.பி), அம்பாறை மாவட்ட கணக்காளர் ஐ.எம். பாரிஸ், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம்.அஸ்லம், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம். பி.எம். ஹுசைன், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.எல்.ஐ. கபீர்,கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், அதாவுல்லா எம்.பியின் இணைப்பாளர் ஏ.ஏ.ஏ ஆகீப், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷரபின் இணைப்பாளரும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.சீ.எம் சஹீல், பாடசாலை அதிபர், கிராமசேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,அரிசி ஆலை உரிமையாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







**அஷ்ரப் கான்...**
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

# Apax Campus இன் பட்டமளிப்பு விழா

Apax Campus இன் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 29ஆம் திகதி பி.எம்.ஐ.சி.எச் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நிறுவனத்தின் ஸ்தாபகர் மீரா சாஹிப் ஜெஸ்லின் ரிசாட் தலைமையில் நடைபெற உள்ளது.



இந்நிகழ்வில் மாலைதீவு, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, எகிப்து மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், உள்நாட்டு அமைச்சர்கள், பேராசிரியர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்வித்துறை உயரதிகாரிகள், சிறப்பு விருந்தினர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளனர். கல்வி, முகாமைத்துவம், கலை, விஞ்ஞானம் போன்ற துறைகளில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்த நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

Apax Campus நிறுவனமானது 2012 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனமானது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணவு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு பல்வேறு கற்கைநெறிகளை தொலைதூர கற்கை மூலம் வெற்றிகரமான முறையில் நடத்தி வருகின்றது.




அந்த வகையில் IIC University of Technology, Azteca University மற்றும் Gideon Robert University போன்ற பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சான்றிதழ் கற்கைநெறி முதல் கலாநிதி கற்கைநெறி வரையிலான பல்வேறு துறைசார் கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது.

2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையும் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் இருந்து கூட கற்கைநெறிகளை வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்வேறு துறைகளில் தொழில் வாய்ப்புகளை பெற்றுள்ளனர்.

# கனி தரும் வாழ்வு வழங்கும் நிறைவும் நிம்மதியும்

## இயேசுவின் "திராட்சைக் கொடி" உருவகம்

இயேசு தம்மைத் "திராட்சைச் செடி" என்றும் தம்மில் நம்பிக்கை கொள்வோரைத் "திராட்சைக் கொடி" என்றும் உருவகித்துக் கூறுகிறார். செடியோடு இணைந்திருக்கின்ற கொடிதான் உயிரோடு இருக்கும். செடியை விட்டுப் பிரிந்த கொடி மடிந்துபோகும். இந்த உருவகத்தில் இயேசு இரு உண்மைகளைக் காட்டுகிறார்.

முதல் உண்மை இயேசுவுக்கும் தந்தை இறைவனுக்கும் இடையே உள்ள உறவு.



இயேசு என்னும் திராட்சைச் செடியை "நட்டு வளர்ப்பவர்" இயேசு தந்தை என அழைக்கின்ற கடவுள்தாம். இதனால் இயேசுவுக்கும் தந்தைக்கும் இடையே நிலவுகின்ற உறவு தெரிகிறது.

இயேசு தந்தையோடு கொண்டுள்ள உறவு மனித உறவுகளைக் கடந்தது. ஆனால் அன்பின் நிறைவும் முழுமையும் அந்த உறவில் உண்டு. அந்த அன்பு எவ்வளவு ஆழமானது என்றால் இயேசு தம்மைக் காண்போர் தம் தந்தையையே காண்கின்றனர் என்றார். அதே நேரம் இயேசு தந்தையின் திருவுளத்திற்கு முற்றிலும் அமைந்தவராகவே இவ்வுலகிற்கு வந்தார். தந்தை தமக்களித்த பணியை நிறைவேற்றுவதில் இயேசு கருத்தாயிருந்தார்.

தந்தையாம் கடவுளுக்கும் இயேசுவுக்கும் இடையே நிலவுகின்ற உறவு இயேசுவுக்கும் சீடர்களுக்கும் இடையே நிலவுகின்ற உறவாக மாறுகிறது. அதாவது, இயேசு தம்மைத் திராட்சைச் செடிக்கும் தம் சீடர்களைத் திராட்சைக் கொடிக்கும் ஒப்பிடுகிறார். இயேசு செடி என்றால் அவரில் நம்பிக்கை கொள்ளும் நாம் கொடிகள்.

கொடி செடியோடு இருந்தால் வாழ்வு பெறும்; செடியைப் பிரிந்த கொடி மடியும். இயேசுவோடு இணைந்திருத்தலில் இரு அம்சங்கள் உண்டு. முதலில் நாம் அவரிடத்தில் நம் முழு நம்பிக்கையையும் வைக்க வேண்டும். அதன் விளைவாக நாம் அவருடைய அன்புக் கட்டளையை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு செயல்படும்போது கடவுளுக்கு நாம் மாட்சி அளிப்போம்.

கடவுள் நமக்குத் தருகின்ற வாழ்வு மறைந்துபோகும் ஒன்றல்ல; அது எந்நாளும் நீடிக்கின்ற நிலைவாழ்வு. அதே நேரத்தில் நம்மில் உறைகின்ற இறைவாழ்வு நற்கனிகளாக வெளிப்பட வேண்டும். அன்பிலிருந்தும் இறைநம்பிக்கையிலிருந்தும் பிறக்கின்ற கனிகள் மனித குலம் வாழ்வதற்கு வழியாகும். பிறருடைய நலனை நாம் முன்வைத்துச் செயற்படும்போது நாம் "மிகுந்த கனி தருவோம்". மனிதர் வாழ்வு பெறுவதே கடவுளுக்கு மாட்சியாக அமையும்.

வாழ்க்கை என்பது கனி நிறைந்த வாழ்வாக இருக்க வேண்டும். இந்த கனி தரும் வாழ்வு என்பது, நமக்குள் நிறைவையும் நிம்மதியையும் தருவது. பிறருக்கு பயன்படக்கூடியது. இறைவனுக்கு மகிமை சேர்ப்பது. ஒருவன் வாழ்ந்ததன் பயன் இதுதான். இத்தகைய கனி தரும் வாழ்க்கையை வாழ, ஒருவன் இறைவனோடு இணைந்திருக்க வேண்டும்.

இக் கருத்தை இயேசு இப்பகுதியில் பலமுறை உணர்த்துகிறார். 'இணைந்திருத்தல்', 'நிலைத்திருத்தல்' என்னும் வார்த்தைகளை இதற்கென பலமுறை பயன்படுத்துகிறார். "இணைந்து இருந்தாலன்றித் தானாக கனிதர இயலாது". "இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்". "என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது". "நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்." இவ்வசனங்கள் இதற்குச் சான்றுகள்.

இயேசுவோடு இணைந்திருப்பதன் நெருக்கம் பல பலன்களைக் கொடுக்கவல்லது. இயேசுவை விட்டுக் கொஞ்சம் விலகினாலும் அந்த இழப்பு, கொஞ்சம் அல்ல. மிக மிகப் பெரிது. "என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது"

அதே வேளை,நாம் இயேசுவோடு இருந்தால், "விரும்பிக் கேட்டதெல்லாம் கிடைக்கும்". இயேசுவோடு நெருக்கமாக செடியும் கிளையுமாக, கிளையும் கொடியுமாக இணை பிரியாத இந்த நெருக்கம் மிகுந்த பலனைத் தரும். கனி கொடுக்கும்.

**அருட்திரு ஜோசப் லியோன்**

# இறையழைத்தலுக்கான உலக தினம்

"நம்பிக்கையை விதைக்கவும் அன்பைக் கட்டியெழுப்பவும் அழைக்கப்படுகின்றீர்கள்"

**திருத்தந்தை பிரான்சிஸ்**

கத்தோலிக்கத் திருச்சபையினால் சிறப்பிக்கப்படும் இறையழைத்தல்களுக்காகச் செபிக்கும் உலக தினத்தில் அருள்பணித்துவ மற்றும், துறவற வாழ்வைத் தேர்ந்து கொண்டவர்கள் தங்களின் இறையழைப்புக்காக ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றனர், அவ் வாழ்வைக் கொண்டாடுகின்றனர்.

"நம்பிக்கையை விதைக்கவும் அன்பைக் கட்டியெழுப்பவும் அழைக்கப்படுகின்றீர்கள்" என்ற



தொனிப்பொருளில் சிறப்பிக்கப்படும் இறையழைத்தலுக்கான உலக தினமானது நற்செய்திப் பணிக்கான அழைப்பாகவும் பலவிதமான குறிக்கோள்களால் வகைப்படுத்தப்படும் ஒரே திருஅவையை மீண்டும் கண்டறிவதற்கான ஓர் அரிய வாய்ப்பாகவும் உள்ளது என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்கத் திருச்சபையால் சிறப்பிக்கப்படும் இறையழைத்தலுக்காக செபிக்கும் உலக தினத்தை நினைவுகூர்ந்த மூவேளை செப உரையின் போது இவ்வாறு கூறினார் திருத்தந்தை.

அத்துடன் ஏப்ரல் 20 சனிக்கிழமை மாலை உரோம் மறைமாவட்டத்திற்கான குருக்களாக வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் அருள்பொழிவுபெற்ற புதிய குருக்களை நினைவுகூர்ந்து அவர்களை வாழ்த்திய திருத்தந்தை அப்புதிய குருக்களுக்காக செபிக்குமாறு திருப்பயணிகளிடம் கேட்டுக்கொண்டார்.

மத்திய கிழக்குப் பகுதிகளில் நிகழும் யுத்த சூழலை நினைவுகூர்ந்த திருத்தந்தை, அமைதிக்கான தனது விண்ணப்பத்தை மீண்டும் வலியுறுத்தி உரையாடலும் பேச்சுவார்த்தைக்கான பாதைகளும் விரிவடையட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

உரோம், இத்தாலி மற்றும் உலகின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்திருந்த திருப்பயணிகள் அனைவரையும் வாழ்த்திய திருத்தந்தை அப்போஸ்தலின் சபை அருள்சகோதரிகள் அனைவரையும் வாழ்த்தி தனது செப உரையினை நிறைவு செய்தார்.

**மெரினா ராஜ்**




# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் ஐந்தாமாண்டு நினைவேந்தல்













ஈஸ்டர் ஞாயிறு குங்குத் தாக்குதலை நினைவு கூரும் ஐந்தாமாண்டு நினைவேந்தல் நிகழ்வு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் நடைபெற்றது. சர்வ மதத்தலைவர்கள், அருட்தந்தையர்கள் மற்றும் அருட் சகோதரிகள், மேற்படி குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பத்தினர், விசுவாசிகள் பங்கேற்ற நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்

படங்கள்: ரஞ்சித் அசங்க

# இறை அழைத்தல் ஞாயிறும் நல்லாயனின் வழிநடத்தலும்

இந்த ஞாயிறு நற்செய்தியில் 'நல்லாயன் உவமை' முக்கியத்துவம் பெறுகிறது. பழைய உடன்படிக்கையில் கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே நிலவிய உறவு ஓர் ஆயனுக்கும் அவருடைய ஆடுகளுக்கும் இடையே நிலவிய உறவுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது (ஏசாயா 40:11; எரேமியா 23:34)

நல்லாயனுடைய தனிப்பண்புகள்: "அவர் இரவும் பகலும் தன் ஆடுகளுடன் இருக்கிறார். அவற்றின்மீது அக்கறை கொண்டு அவற்றின் தேவைகளை நிறைவுசெய்து அவற்றிற்காகத் தம் உயிரையும் கொடுத்து அவற்றைக் கொடிய விலங்குகளிடமிருந்து பாதுகாக்கிறார்."

ஆனால் போலி ஆயர்கள் தங்கள் ஆடுகளை மேய்க்காமல் தங்களையே மேய்த்துக் கொண்ட அவலநிலையில் (ஏசாயா 24:78). 'என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்குக் கொடுப்பேன்' என்று கடவுள் வாக்களித்தார். (எரேமியா 3:15), கடவுளால் வாக்களிக்கப்பட்ட ஒப்புயர்வற்ற ஆயர் இயேசு கிறிஸ்துவே.

அவர்தம் ஆடுகள் ஒவ்வொன்றையும் தனிப்பட்ட முறையில் அறிந்து, அன்புசெய்து. அவற்றிற்காகத் தன் இன்னுயிரையும் கையளிக்கிறார். மேலும் அவரது மந்தையைச் சாராத மற்ற ஆடுகளையும் கூட்டிச் சேர்த்து ஒரே மேய்ப்பன் கீழ் ஒரே மந்தையை உருவாக்குகிறார் (யோவா 10:1416).

மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை அக்கறையுடன் கண்காணிக்க வேண்டும்.





அவ்வாறே ஆடுகளும் தங்களுடைய மேய்ப்பர்களுடைய குரலுக்குச் செவிமடுத்து, மந்தையில் திருட்டுத்தனமாக நுழைந்து ஆடுகளைப் பறித்துக் கொண்டுபோகும் ஓநாய்களான போலிகளிடம் சிக்கிக் கொள்ளாமல் விழிப்பாயிருக்க வேண்டும்,

"ஆண்டவர் என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை " என்னும் 23ம் திருப்பா வையை குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் உண்மையிலேயே இன்று பாட முடியுமா? 23வது திருப்பாவையை இக்காலத்தில் பின்வருமாறு தான் பாடமுடியும்: "டி.வி, என் ஆயன்; ஆகவே எனக்கொரு குறையுமிராது. அது என்னை பஞ்சுமெத்தையில் படுக்கச் செய்கிறது விசுவாச வாழ்விலிருந்து விலகச்செய்கிறது. என் ஆன்மாவைக் கொலை செய்கிறது, சிற்றின்பத்திற்கும் வன்முறைக்கும் அது என்னை அழைத்துச் செல்கிறது.

தனிமையைக் கண்டு நான் பயப்படவே மாட்டேன். ஏனெனில் என் டி.வி, என்றும் என்னுடன் இருக்கின்றது. உலக மனப்பான்மையாலும் நுகர்வுப் பொருள் கலாசாரத்தாலும் டிவி என்னைத் திருநிலைப்படுத்துகிறது. என் பேராசைப் பொங்கி வழிகிறது. சோம்பலும் அறியாமையும் என்னைப் பின்தொடரும். வாழ்நாள் முழுவதும் டி.வியைப் பார்த்த வண்ணம் என் இல்லத்தில் குடியிருப்பேன்."

இது வெறும் கற்பனையல்ல. முழுக்க முழுக்க உண்மை. துறவறத்தாரும் இல்லறத்தாரும் டி.வி.யின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். டி.வி. நம்மை அடிமைப்படுத்தி நமது மூளையைச் சலவை செய்து சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பறித்து விட்டது. இப் பேராபத்திலிருந்து நாம் நம்மையும் நம்மைச் சார்ந்திருப்போரையும் காத்துக் கொள்ள வேண்டும்.

'நல்லாயன் ஞாயிறு' என்றழைக்கப்படும் இந்த ஞாயிறு இறை அழைத்தல் நாளாகவும் கொண்டாடப்படுகின்றது. "என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" (மாற் 1:17) "இளைஞரே, நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள், கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கிறது. தீயோனை நீங்கள் வென்று விட்டீர்கள்" (1 யோவா 2:14).

என்னும் நல்லாயன் குரலைக் கேட்டு. விசுவாசம் மற்றும் அர்ப்பண உணர்வுடன் அவரைப் பின்பற்றத் துணிச்சலுடன் முன் வரவேண்டும்.

"ஆண்டவரே நாங்கள் யாரிடம் செல்வோம்? வாழ்வளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன" (யோவா 6:68) என்றழைக்கிறது விவிலிய உலகம்.

"இளைஞரே, நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள், கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கிறது. தீயோனை நீங்கள் வென்று விட்டீர்கள்" (1 யோவா 2:14).

**அருட்பணி வை.இருதயராஜ்**

# பொதுஜன பெரமுனவை உருவாக்கியதில் ஹோமாகம மக்கள் பெரும் பங்காற்றினர்

ஹோமாகம தொகுதியின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்குழு கூட்டம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் உரையாற்றுவதையும் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.



இங்கு பேசிய அமைச்சர்,

"2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் பொதுச் செயலாளராக கடமையாற்றிய மைத்திரிபால சிறிசேன கடைசி நேரத்தில் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவுடன் போட்டியிட்டார். இறுதியில் நாட்டைக் காப்பாற்றிய தலைவரான ஜனாதிபதி வீட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் அச்சந்தர்ப்பத்தில் நாம், அந்த தலைமையை கைவிடாது பொதுஜன பெரமுனவை உருவாக்க பல சவால்களுக்கு மத்தியில் நடவடிக்கை எடுத்தோம் . அதில் ஹோமாகம மக்களுக்கு ஒரு வரலாற்று பாரம்பரியம் உள்ளது, மேலும் அதிக வாக்குகளுடன் கோட்டபாயவை ஜனாதிபதியாக நியமிக்க முடிந்தது.

நாடு எதிர்நோக்கும் இந்த முக்கியமான பிரச்சனை குறித்து யாரும் விவாதிப்பதில்லை. எனவே, இச்சவாலை முறியடிக்கும் தகுதியுள்ள ஒருவரே நாட்டை காப்பாற்ற முன்வர வேண்டும். இதற்கான கடைசி வாய்ப்பு இது. அதற்கான பெரும் பொறுப்பு நமக்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தில், துணை தூதுவர் முனைவர் துரைசாமி வெங்கடேசனை நேற்று (22) மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் சந்தித்தார். இந்திய மத்திய அரசினதும் மாநில அரசுகளினதும் அனுசரணையுடன் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சிகளில் மலையகப் பகுதிகளில் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு வாய்ப்புகளை பெறுவதும், உயர் கல்விக்கான கூடுதல் புலமைப்பரிசுகளை அதிகரிப்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில், இந்தோ சிலோன் வர்த்தக தொழில் சம்மேளனத்தின் இயக்குநர் தான்ஸ் நிஷாவும் பங்கேற்றிருந்தார்.



அயோத்தி ஸ்ரீ ராமர் ஆலயத்தின் நிர்வாக முக்கியஸ்தர் நேற்று கண்டிக்கு வருகை தந்தார் . மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏகநாயக்க சகிதம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பளர் தேசபந்து எம் . தீபனும், கண்டி தமிழ் வர்த்தக சங்க உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டார்கள்.

படம் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டீ. வசந்தகுமார்

## இன்றைய பலன்கள்

(23.04.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
செல்வநிலை உயரும் செல்வாக்கு அதிகரிக்கும். வாழ்க்கை துணையோடு உருவான பிரச்சினைகள் அகலும். உடல் நலம் சீராகும்.

**ரிஷபம் :**
விரயங்கள் கூடுதலாக தான் இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்தலாம்.

**மிதுனம்:**
செலவுகேற்ற வரவு உண்டு. சில காரியங்களை அதிக முயற்சிக்குப் பின் முடிக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்:**
நிலங்கள் விற்பனையால் இலாபம் உண்டு. எதிர்காலத்தை பற்றிய பயம் அகலும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர்.

**சிம்மம்:**
முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். இதுவரை தடையாக இருந்த காரியங்கள் இப்பொழுது தானாக நடைபெறும்.

**கன்னி:**
அடகு வைத்த நகைகளை மீட்டு வந்து அணிந்து அழகு பார்ப்பீர்கள். தொழிலில் தடைபட்ட ஒப்பந்தங்கள் தானாக வந்து சேரும்.

**துலாம்:**
கல்யாண கனவுகள் நனவாகும். உத்தியோகத்தில் கடமையை செவ்வனே செய்து மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவீர்கள்.

**விருச்சிகம்:**
விபரீத ராஜயோக அடிப்படையில் நல்ல சம்பவங்கள் நடைபெறப்போகிறது. திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட படியே நடைபெறும்.

**தனுசு:**
பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். பிரபலமானவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்து கொடுப்பர்.

**மகரம்:**
தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள். கட்டிட பணி தொடரும்.

**கும்பம்:**
வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் தேடி வரும். பணியை சிறப்பாக செய்து முடித்து மேலதிகாரிகளின் மனதில் இடம் பெறுவீர்கள்.

**மீனம்:**
குடும்பம் சுமை கூடும். உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் சுப காரியங்களை முன் நின்று நடத்துவீர்கள். வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு.

## குருதிக்கொடை முகாம் நாளை

***பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஆராதனா மஹோற்சவத்தை முன்னிட்ட திரவ அன்பு தான (குருதிக்கொடை) முகாம் இடம்பெறவுள்ளது.***

***இக்குருதிக்கொடை முகாமானது இம்மாதம் நாளை (24) புதன்கிழமை மதியம் 2 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை 22, பார்ன்ஸ் ப்ளேஸ் கொழும்பு 07 இல் அமைந்துள்ள கொழும்பு சத்திய சாயி நிலையத்தில் இடம் பெற உள்ளது.***

***உயிர் காக்கும் தானமாகிய இந்த திரவ அன்பு தானத்தில் முடிந்த வரை தகுதியுள்ள அனைவரும் பங்கு கொண்டு இந்த உயரிய சேவைப் பணியில் இணைந்து செயற்படுவோம்.***

## 68,131 ஹெக்டேயர்...

71 வீதம் சேதமடைந்துள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு, சுமார் நான்கரை மாதங்களாக பெய்த தொடர் மழை பெய்தது. இதனால், மரக்கறிச் செய்கைகள் பாதிக்கப்பட்டு , இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் காய்கறி விலைகள் வேகமாக அதிகரித்தன. இந்நிலையில், 23 ஆயிரத்து 874 ஹெக்டேயரில் பயிரிடப்பட்ட காய்கறிகள் உள்ளிட்ட பிற பயிர்கள் பூச்சி மற்றும் பிற நோய்களால் பாதிக்கப்பட்டன. இது மொத்த சேதமடைந்த பயிர்களில் 27 சதவீதம் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

2023/24 பெரும்போக உற்பத்தி பயிர்ச் சேதம் தொடர்பாக விவசாய அமைச்சு தயாரித்த அறிக்கையை விவசாயத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## பந்தயத்திற்காக உபயோகப்படுத்தப்படும்...

மேற்படி நடவடிக்கையை மேற்கொள்வதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நிஷாந்த அனுருத்த தெரிவித்தார்.

கார் ஓட்டப்பந்தயத்திற்காக உபயோகிக்கப்படும் பெரும்பாலான வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத காரணத்தால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன என தெரிவித்துள்ள மேற்படி ஆணையாளர், அது தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு தெரிவித்துள்ளார்.

அதன் போது இவ்வாறு பந்தயத்திற்காக உபயோகப்படுத்தப்படும் வாகனங்களைப் பதிவு செய்வதற்காக புதிய முறைமையொன்றை தயாரிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அந்த வகையில் பந்தயங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் வாகனங்களை பதிவு செய்வதற்கு உரிய புதிய முறைமையுடன் அமைச்சரவைப் பத்திரமொன்றை தயாரித்து விரைவாக அமைச்சரிடம் கையளிக்கவுள்ளதாகவும் போக்குவரத்து ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாவனைக்கு உகந்ததென...

பாவனைக்கு உகந்தது என உறுதிப்படுத்தப்பட்ட அரிசி தொகையை, மீள் பரிசோதனை செய்து பெற்றுக்கொள்ள சுகாதார அதிகாரிகள் குழுவை நியமிக்குமாறு சகல மாகாணச் செயலாளர்களை அறிவுறுத்தியிருப்பதாகவும், உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புக்கான செயலகம் அறிவித்துள்ளது.

மத்திய களஞ்சியசாலையிலிருந்து அந்தந்த மாகாணங்களுக்கு அரிசியைப் பகிர்ந்தளிக்க முன்னர், மாகாண கல்விக்குப் பொறுப்பான தலைமை அதிகாரியொருவர் மற்றும் மாகாண பொது சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினரால் பாவனைக்கு உகந்த அரிசியென, உறுதி செய்யப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முத்திரையுடன் உறுதிப்படுத்தப்படும் அரிசி மாத்திரமே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படும் உணவின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், அரிசியை பொதுச் சுகாதார பரிசோதகர் தர நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் செயலகம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச உணவுப் பொதியிடல் தர நியமங்களுக்கு அமைவாக பொதி செய்யப்பட்ட அரிசி தொகையை மே 31 ஆம் திகதி வரையில் பயன்படுத்த முடியும் என்பதை உலக உணவுத் திட்டம் உறுதி செய்துள்ளது. பொதியின் மேற்புறத்தில் "Not for Sale" விற்பனைக்கு இல்லை எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இதனால், வழங்கப்படும் அரிசி மனித பயன்பாட்டிற்கு உகந்தல்ல என பொருள்படாதெனவும் உலக உணவுத் திட்டத்தின் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## தேசிய அடையாள...

விண்ணபிப்பதற்கான இறுதி நாளாக கடந்த (31) என அறிவிக்கப்பட்டிருந்தது.எனினும்,பிரதேச செயலாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஜூன் (30 ) வரை கால எல்லையை நீடித்துள்ளதாக, ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் ஜி.பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

## யுக்திய என்ற போர்வையில்...

பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுள்ள மேற்படி கும்பல், வீட்டிலுள்ளோர் அனைவரையும் அறையொன்றில் பூட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவற்காடு பிரதேசத்தில் புகையிலை மற்றும் மரக்கறி உற்பத்தியில் ஈடுபட்டுவரும் நபரொருவரின் வீட்டிலேயே, இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட வீட்டில் கோடீஸ்வரரான வர்த்தகர்,அவரது மனைவி, அவரது தாய் மற்றும் மூன்று மகள்மாரும் இருந்துள்ளனர். பொலிஸ் விளையாட்டுப் பிரிவின் சீருடைக்கு சமமான சீருடை அணிந்திருந்த மேற்படி கும்பல், யுக்திய நடவடிக்கையை மேற்கொள்வதாகக் கூறியது. பின்னர்,அங்குள்ளவர்களை ஏமாற்றி வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களையும் இக்குழு பரிசோதித்தது.

வீட்டிலுள்ள முக்கியமான பொருட்கள், பணவைப்புப் பெட்டகம் ஆகியவற்றையும் அவர்கள் பரிசோதித்தனர். இதையடுத்து அவர்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்த கமரா தரவுத் தொகுதியையும் கழற்றினர். பின்னர் வீட்டிலுள்ளோரை அறையொன்றில் பூட்டிவைத்துவிட்டு அங்கிருந்த 90 இலட்சம் ரூபாவுக்குமதிகமான பணம் மற்றும் பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## கடனாளர்களுடன் இணக்கப்பாடு...

நாணய நிதியம் ஒரு பார்வையாளராக பங்களிப்பதை மீண்டும் வலியுறுத்திய அவர், எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினருக்கு பாரிய பொருளாதார கட்டமைப்பு உள்ளீடும் வழங்கப்பட்டதாகவும் கூறினார். பாராட்டினார்.

## அமைச்சர் விஜயதாசவுக்கு...

அங்கத்துவம் தொடர்பில் விரைவில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.பத்திரமுல்லை நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தவகையில் பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆகியோர் அமைச்சர் விஜயதாச தொடர்பில் உரிய தீர்மானங்களை மேற்கொள்வர் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஈஸ்டர் தாக்குதல் விவாதம்...

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) சட்டமூலம் (இரண்டாம் வாசிப்பு) மற்றும் நச்சு, அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழான விடயங்கள் (24) புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை விவாதிக்கப்படவுள்ளது.இதன் பின்னர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதம் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் ஜனாதிபதி...

சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள நிலையில், பாகிஸ்தான் விஜயத்தை நிறைவு செய்து, நாளை நாட்டுக்கு வருகைதரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.இஸ்ரேல், ஈரான் மீதான மோதல்கள் நீடித்தால்,இலங்கையின் பொருளாதாரம் பாதிப்படையும் என பொருளாதா ஆர்வலர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முச்சக்கர வண்டிகளுக்கு...

சாரதிகள் கையடக்கத் தொலைபேசிகள் மூலம் கட்டணங்களை வசூலித்தால், அது தொடர்பான முறைப்பாடுகளை 011 2860 860 என்ற இலக்கத்திற்கு அறிவிக்குமாறு மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மக்களுக்கு அறிவித்துள்ளது.

## எலுமிச்சம் பழத்தின்...

பழத்தின் விலை, 100 ரூபாய்க்கும் குறைவாக இருந்தது. நிலவும் வரண்ட காலநிலையால், பானங்கள் தயாரிப்பதற்கான எலுமிச்சம் பழத்தின் தேவை அதிகரித்துள்ளது.

## வசத் சிரிய 2024'... *(03 ஆம் பக்க தொடர்ச்சி)*

12 ஆம் இடம் வரை பெறும் போட்டியாளர்களுக்கு ஆறுதல் பரிசிலும் சான்றிதழும் வழங்கப்படும்.

வசத் சிரிய 2024 புத்தாண்டு அழகன் மற்றும் அழகி போட்டிகளுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி (23) இன்றுடன் நிறைவடைகிறது. ஸ்டாண்டர்ட் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி முதல் இடத்திற்கு ரூ.100,000, இரண்டாம் இடத்திற்கு ரூ.75,000, மூன்றாம் இடத்திற்கு ரூ.50,000, நான்காம் இடத்திற்கு ரூ.35,000, ஐந்தாம் இடத்திற்கு ரூ.20,000 மற்றும் ஆறு முதல் பத்து இடங்களுக்கு தலா 10,000 ரூபாவும் மற்றும் 11 முதல் 20 இடம் வரையான இடங்களை பெறுவோருக்கு ரூ.6,000. வீதம் வழங்கப்படும்.

## சவால்களை எதிர்கொண்ட...

கடந்த காலங்களில் நாட்டில் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கத்தின் வருமான அளவு குறைவடைந்ததாக தெரிவித்துள்ள அவர், இந்த வருடத்தின் முதல் காலாண்டில் எதிர்பார்த்த இலக்கை விட அதிகரித்த வருமானத்தை பெறமுடிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## குற்றவாளிகளுடன் தொடர்புள்ள...

கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யுக்திய நடவடிக்கையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களை அடுத்த மாதத்திற்குள் அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் அதற்கான விசேட இடம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

## விஜயதாசவின் பெயரை...

மைத்திரி தரப்பு தெரிவித்துள்ளது. இதன்படி, விஜயதாச ராஜபக்ஷவின் பெயர் மற்றும் நிறைவேற்று சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவுள்ளதாக அந்த தரப்பினர் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி,கட்சியின் செயற்குழு கூட்டம் எத்துல்கோட்டே பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. இதன் போதே கட்சியின் பதில் தலைவராக விஜயதாச தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள விஜயதாச ராஜபக்ஷ,

"கட்சியை விட்டு வெளியேறிய அனைவரையும் ஒன்று திரட்டி சிறந்த பயணத்தை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டால் கட்சியை முன்னேற்ற முடியும். நாடும் முன்னேற்றமடையும். எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தொழிலாளர் சார்பாக...

விடுத்துள்ளார். மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாட் சம்பளத்தை1,700 ரூபாவாக அதிகரிக்குமாறு வலியுறுத்தி,மலையக பகுதிகளில் நேற்று போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்கிடையில், பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை உடனடியாக மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இந்நிலையில்,நாளை (24) சம்பள நிர்ணய சபை மீண்டும் கூடவுள்ளது.

## தியத்தலாவை கார் பந்தய...

பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை கைதாகினர்.தியத்தலாவை பொலிஸார் இவர்களை கைது செய்தனர்.

இவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதால் எதிர்வரும் (30) வரை விளக்கமறியலில் வைக்குமாறு பண்டாரவளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பேராதனை மற்றும் மாத்தறை பகுதிகளைச் சேர்ந்த 47 மற்றும் 36 வயது துடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தியத்தலாவ, கார் பந்தயத்திடலில் இடம் பெற்ற அகோர விபத்தில் ஏழு பேர் பலியான துடன் 23 பேர் காயங்களுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.தியத்தலாவ Fox Hill Super Cross 2024 கார் ஓட்டப்பந்தயத்தில், பந்தயப் பாதையை விட்டு காரொன்று விலகியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றது.


**மூடும் திகதியை நீடித்தல்**

**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**

BID No.: 052/T/2023

SUPPLY OF 11 Nos. OF VHF AIR BAND TRANSCEIVERS WITH ACCESSORIES FOR BIA, CIAR & MRIA

2024 மார்ச் 01 ஆம் திகதியன்று மேலேயுள்ள விலைமனு தொடர்பாக டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விடயத்திற்கு மேலானது.

மேலேயுள்ள விலைமனுவின் மூடும் திகதியானது 2024 மே 29 ஆம் திகதியன்று புதன்கிழமை பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்திலிருந்து எந்தவொரு வேலை நாளிலும் 2024 மே 28 ஆம் திகதி வரையும் மாத்திரம் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம்**
**மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

## மாத்தளை மாவட்டத்தில்
# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோக வேலைத்திட்டம் ஆரம்பம்

மாத்தளை சுழற்சி நிருபர்

அரசாங்கத்தின் வசதி குறைந்த குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 91924 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் முன்னெடுக்கப்படவுள்ள இந்நிகழ்ச்சி திட்டத்திற்கமைய அஸ்வெசும மற்றும் சமுர்த்தி பயனாளிகள், சிறுநீரக நோயாளர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் வயோதிப கொடுப்பனவு பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு தலா 20kg அரிசி என்ற அடிப்படையில் இவை வழங்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் மாத்தளை மாவட்டத்தில் கலேவல பிரதேச செயலக பிரிவில் 1879 குடும்பங்களுக்கும் தம்புள்ளை பிரதேச செயலக பிரிவில் 10332 குடும்பங்களுக்கு பல்லேபொல பிரதேச செயலக பிரிவில் 4665 குடும்பங்களுக்கும் நாவுல பிரதேச செயலக பிரிவில் 5678 குடும்பங்களுக்கும் யடவத்த பிரதேச செயலக பிரிவில் 6263 குடும்பங்களுக்கும் மாத்தளை பிரதேச செயலக பிரிவில் 9510 குடும்பங்களுக்கும் அம்பங்கங்க பிரதேச செயலக பிரிவில் 2951 குடும்பங்களுக்கும் லக்கல பிரதேச செயலக பிரிவில் 4600 குடும்பங்களுக்கும் வில்கமுவ பிரதேச செயலக பிரிவில் 9334 குடும்பங்களுக்கும் உக்குவளை பிரதேச செயலக பிரிவில் 9035 குடும்பங்களுக்கும் இரத்தோட்டை பிரதேச செயலக பிரிவில் 10768 குடும்பங்களுக்கும் இவ்வாறு அரிசி நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## கட்டுகஸ்தோட்டையில் மோதல்; நால்வர் படுகாயம்

அக்குறணை குறூப் நிருபர்

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயமடைந்த நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவருக்குமிடையில் நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த காணிப் பிரச்சினையே மோதலுக்கு காரணமென பொலிஸார் தெரிவித்தனர். மோதலில் நால்வர் காயமடைந்துள்ளனர். இதில் தந்தையும் மகனும் காயமடைந்து கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மற்றைய தரப்பில் 17 மற்றும் 26 வயதுகளையுடைய இருவர் காயமடைந்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் பெண் ஒருவரும் உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## மலைச்சாரல்

## முறையான செயற்பாடுகளை முன்னெடுக்க தவறும் பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை



முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தவறும் மாகாணங்களின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், கடமைகளைத் தொடர முடியாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். மே மாதம் 31 க்கு முன்னர் இவர்கள் முறையான கடமைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். நுவரெலியாவில் நடைபெற்ற சமூக பொலிஸ் குழுக்களை தெரிவுபடுத்தும் நிகழ்விலே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர்:

குற்றச் செயல்களில் ஈடுபடும் பாதாளக்கோஷ்டியினர், போதைப்பொருள் கடத்தல்காரர்களை இல்லாதொழிப்பதற்காக விஷேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது மேற்கொள்ளப்படும் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம்.

இதற்கு சமூக பொலிஸ் பாதுகாப்பு குழுக்கள் பெரும் பங்காற்ற முடியும். போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை சிலர் தடுக்க முயற்சிக்கின்றனர். பொலிஸாருக்கு துப்பாக்கி வழங்கப்பட்டுள்ளமை தேவையான நேரத்தில் பயன்படுத்துவதற்கே. கிராமங்களில் குண்டர்கள் இருக்கக்கூடாது. இவ்வாறான குண்டர்களே, பாதாள உலகில் அடுத்தடுத்து கொலைகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

## முஸ்லிம் கல்வி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில்
# நோன்பு பெருநாள் விசேட இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வு







கல்வியமைச்சின் முஸ்லிம் கல்வி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் நோன்பு பெருநாள் விசேட இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வு அண்மையில் மாவனல்லை சாஹிரா தேசிய பாடசாலையின் ஆரம்ப பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு அதிபர் ஏ. எம். நௌசாட் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சின் பாடசாலை விவகார மேலதிக செயலாளர் திருமதி உதார திக்கும்புர கலந்து கொண்டார்.

மேலும் கௌரவ அதிதிகளாக கல்வியமைச்சின் முஸ்லிம் கல்வி அபிவிருத்திப் பிரிவின் கல்விப் பணிப்பாளர் மேஜர் என்.தி.நசுமுத்தீன், கல்வியமைச்சின் அழகியல் பிரிவின் கல்விப் பணிப்பாளர் திரு.வர்ண அழககோன், மாவனல்லை கல்விப் பணிப்பாளர் திருமதி பிரியதர்சினி ஆகியோர் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினராக தேசியப்பாடசாலைப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தி.எம்.ஆர். டப்ளியூ.திவெகரா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கேகாலை மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வுகளும் இதன்போது நடைபெற்றன.

## சம்பள உயர்வு போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் இ.தொ.கா நன்றி தெரிவிப்பு



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய அறவழி போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.காவின் தலைவருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டுமென வலியுறுத்தி மலையக மாவட்டங்களிலும், போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதில் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தை வலுப்பெற செய்த தொழிலாளர்கள் வர்த்தகர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துகொள்ளவதோடு, எதிர்வரும் 24ஆம் திகதி கம்பனிகளுடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக தீர்மானம் எட்டப்படவில்லை என்றால் இந்த போராட்டம் வலுப்பெறும் எனவும் செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# சீரற்ற காலநிலை; பொதுமக்களுக்கு எச்சரிக்கை

தற்போது நிலவிவரும் வெப்பத்துடன் கூடிய காலநிலை மற்றும் இடி மின்னலுடனான காலநிலை தொடர்பாக பொது மக்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டுமென வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை தொடர்ந்து அறிவுறுத்திவருகிறது. ஆகக்கூடிய வெப்பநிலை குறித்து திணைக்களம், பொது மக்களுக்கு வழங்கியுள்ள ஆலோசனையில் போதுமான அளவு தண்ணீர் அருந்துதல், நிழலான இடங்களில் இயன்றவரை ஓய்வெடுத்தல், கடுமையான வெளியில் நடமாடுவதைக் கட்டுப்படுத்துதல் போன்ற சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டுமென திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று, வயதானோர் நோய் பாதிப்புள்ளவர்கள் மற்றும் சிறுவர்கள் முதலானோர் இந்த வெப்பநிலை குறித்து கூடுதலான அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தைப் போன்றே சுகாதார பிரிவும் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் குறிப்பிட்ட பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# கால்நடைகளை பதிவு செய்வதை கட்டாயமாக்கவும்; வடக்கு மாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை



வடக்கு மாகாணத்தில் கால்நடைகள் திருடப்படுவதை தடுக்கும் வகையில் அனைத்து கால்நடைகளையும் பதிவு செய்யும் நடவடிக்கையை கட்டாயமாக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுவதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்துவருவதை கருத்திற்கொண்டு ஆளுநர் இந்நடவடிக்கையை எடுத்துள்ளார். கால்நடைகளை வளர்ப்போர் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் எனவும், வெளிமாவட்டங்களுக்கு கால்நடைகளை கொண்டு செல்வதற்கான அனுமதியை வழங்கும் போது உரிய சட்ட விதிகளை அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் எனவும் ஆளுநர்மேலும், கன்று பிறந்து 18 மாதங்களுக்குள் காது அடையாள வில்லைகளை (Ear Tag) பொருத்திக் கொள்வதை கட்டாயமாக்க வேண்டுமெனவும், அவ்வாறு செய்யாத கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் காது அடையாள வில்லைகள் (Ear Tag)பரிசோதிக்கப்பட வேண்டுமெனவும், உரிய நடைமுறைகளை பின்பற்றாத இறைச்சி வெட்டும் இடங்கள் மற்றும் விற்பனை செய்யும் இடங்களுக்கு சீல் வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## வடக்கின் உதயம்

## இலவச அரிசி வழங்கும் தேசிய நிகழ்வு





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் குறைந்த வருமானம் பெறுவோருக்கான இலவச அரிசி வழங்கும் நிகழ்வு நேற்று மன்னார் நகர பிரதேச செயலாளர் திரு.எம்.பிரதீபனின் நெறிப்படுத்தலின் கீழ் மன்னார் நகர பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட "பெரியகடை " சன சமூக நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கௌரவ காதர் மஸ்தான், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கணகேஸ்வரன் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் பங்கேற்புடன் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

## பெண்கள் சுகநல நிலைய திறப்பு விழா



யாழ். விசேட நிருபர்

பெண்கள் சுகநல நிலைய திறப்பு விழா நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வைத்திய நிபுணர் அ.பாலசுப்ரமணியம் சாவித்திரிதேவி தம்பதிகளின் பங்களிப்புடன் சிவபூமி அறக்கட்டளை, யாழ்.போதனா வை த்தியசாலை, மருத்துவ பீடம் ஆகியன இணைந்து இந்நிலையத்தை திறந்துள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி S.R.K. கனக ஈஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டதோடு கருவள சிகிச்சை நிலையத்தையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ரிஷி தொண்டுநாதசுவாமி. யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா. யாழ்.பல்கலையின் மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

காலத்தின் தேவை கருதி சிவபூமி அறக்கட்டளையினால் நிறுவப்பட்டுள்ள கருவள சிகிச்சை நிலையமானது இல. 61, 1 ஆம் குறுக்குதெரு. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு. சின்னப்பன் 'ஆசிரியர் கல்வியின் சமகால செல்நெறி' என்ற பொருளில் அமைந்த அதிதி சிறப்புரை நேற்று காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்றது. அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதிஅதிபர் க. செந்தில்குமரன் நெறிப்படுத்தினார். நிகழ்வில் அறிமுக உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா நிகழ்த்தினார். கலாசாலையின் பிரதி அதிபர் தங்கராசா கோபாலகிருஷ்ணன் நன்றி உரை வழங்கினார்.

## சிறுவன் உட்பட மூவர் தமிழகத்தில் தஞ்சம்



மன்னார் குறூப் நிருபர்

இலங்கையிலிருந்து மூவர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த சிறுவன் உட்பட மூவர் தனுஷ்கோடி அடுத்த ஐந்தாம் மணல் தீடையில் நேற்று காலை தஞ்சமடைந்துள்ளதாக தெரியவருகின்றது. அப்பகுதிக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் இதுதொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.இதனையடுத்து மரைன் பொலிஸார் கடலுக்குள் சென்று பாதுகாப்பாக அவர்களை மீட்டு கரை கொண்டு வந்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண்: பயிற்சிப் போட்டியில் இலங்கை இலகு வெற்றி



மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆடுவதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றிருக்கும் இலங்கை மகளிர் அணி ஆடிய முதல் பயிற்சிப் போட்டியில் நெதர்லாந்து மகளிர் அணியை 63 ஓட்டங்களால் இலகுவாக வென்றது.

அபூ தாபியின் டொலரன்ஸ் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற இந்தப் பயிற்சிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களை பெற்றது.

ஆரம்ப வீராங்கனை விஷ்மி குணரத்ன மற்றும் முதல் வரிசையில் வந்த ஹன்சிமா கருணாரத்ன தலா 49 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டனர். விக்கெட் காப்பாளரான அனுஷ்கா சஞ்ஜீவனி அணித் தலைவியாக செயற்பட்ட நிலையில் சமரி அத்தபத்து களமிறங்கவில்லை.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த நெதர்லாந்து அணி 20 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 120 ஓட்டங்களையே பெற்றது. இதன்போது இலங்கை மகளிர் 8 பந்துவீச்சாளர்களை பயன்படுத்திய நிலையில் இனோகா ரணவீர மற்றும் கவிஷா டில்ஹாரி தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இலங்கை மகளிர் அணி இன்று (23) இரண்டாவது பயிற்சிப் போட்டியில் வனுவாட்டு அணியை எதிர்கொள்ளவுள்ளது.

டி20 உலகக் கிண்ண தகுதிகாண் தொடர் எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அன்றைய தினம் இலங்கை மகளிர் அணி தனது முதல் போட்டியில் தாய்லாந்து மகளிர் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொத்தம் 10 அணிகள் பங்கேற்றுள்ள இந்தத் தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் இரு அணிகளுமே பங்களாதேஷில் எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபரில் நடைபெறும் மகளிர் டி20 உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும்.



றோயல் கல்லூரிக்கு எதிராக நேற்று முன்தினம் (21) நடைபெற்ற டயலொக் ரக்பி செவன்ஸ் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய புனித பீட்டர்ஸ் கல்லூரி அணித் தலைவர் துலாஜ் நவோத்ய வெற்றிக் கிண்ணத்தை டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் வர்த்தக நாம மற்றும் ஊடகப் பிரிவு துணைத்தலைவர் ஹர்ஷ சமரநாயக்க மற்றும் இலங்கை பாடசாலை ரக்பி மற்றும் கால்பந்து சங்கத் தலைவர் கமல் ஆரியசிங்கவிடமிருந்து பெற்றுக்கொள்வதை காணலாம்.

Dialog SCHOOLS RUGBY SEVENS
நாளைய செம்பியன்களை வலுவூட்டும்
Dialog

## காரைதீவு ஹொக்கி லயன்ஸ் 5ஆவது முறையாக சம்பியன்



*காரைதீவு குறூப் நிருபர்*

காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி கிழக்கு மாகாண ஹொக்கி சம்பியனாக மீண்டும் ஐந்தாவது தடவையாக வெற்றி பெற்றுள்ளது.

திருகோணமலை கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நேற்று முன்தினம் (21) இடம் பெற்ற ஹொக்கி மாகாண மட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்ட அணிக்கு எதிராக அம்பாறையை பிரதிநிதித்துவம் செய்து ஆடிய லயன்ஸ் அணி 2–0 என வெற்றி பெற்றது.

மாலைதீவு பாராளுமன்ற தேர்தல்:

## சீனா ஆதரவுடைய முயிசு கட்சிக்கு அமோக வெற்றி

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முயிசுவின் கட்சி நேற்று முன்தினம் (21) நடந்த பாராளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டி தமது அதிகாரத்தின் பிடியை வலுப்படுத்திக் கொண்டுள்ளது.



93 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி 70 இடங்களை வென்றுள்ளது. இது அந்த நாடு இந்திய ஆதரவுப் போக்கில் இருந்து சீனா பக்கம் திரும்புவதைக் காட்டுவதாக உள்ளது.

சீன ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து வரும் முயிசு, நாட்டில் இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில் நாட்டில் அரசியல் யாப்பை திருத்துவதற்கு தேவையான மூன்றில் இரண்டு இடங்களை மக்கள் தேசிய காங்கிரஸ் பாராளுமன்றத்தில் கைப்பற்றும் வாய்ப்பு இருப்பதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சியான மாலைதீவு ஜனநாயக கட்சி 15 ஆசனங்களை மாத்திரமே வென்றுள்ளது. முந்தைய பாராளுமன்றத்தில் இந்தக் கட்சி பெரும்பான்மை இடங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கு முன்னுரிமை அளிக்கும் நாட்டின் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவருவதாகக் கூறி கடந்த ஆண்டு பிற்பகுதியில் ஆட்சிக்கு வந்த முயிசு, இன்னும் டெல்லிக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலிய படை பிரிவு மீது தடை விதிக்க அமெ. திட்டம்

இஸ்ரேலின் இராணுவ படைப்பிரிவு ஒன்றுக்கான உதவியை அமெரிக்கா நிறுத்த உள்ளதாக செய்தி வெளியானதை அடுத்து தமது இராணுவத்தின் மீதான எந்த ஒரு தடையையும் நிராகரிப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



'எனது முழு பலத்துடன் நான் அதற்கு எதிராக போராடுவேன்' என்று நெதன்யாகு ஞாயிறன்று (21) கூறினார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கும் இஸ்ரேலின் நெட்சா யஹுதா படைப் பிரிவு மீது தடை விதிப்பது தொடர்பில் அமெரிக்கா பரிசீலித்து வருவதாக எக்சோஸ் செய்தித் தளம் குறிப்பிட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் இது தொடர்பான அறிவிப்பை அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிலிங்கன் வெளியிடவிருப்பதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் நெட்சா யஹுதா படைப்பிரிவு சர்வதேச சட்டத்திற்கு அமையவே செயற்படுகிறது என்று இஸ்ரேல் இராணுவம் வலியுறுத்தியுள்ளது.


1999 இல் நிறுவப்பட்ட நெட்சா யஹுதா படை, ஆண்களை மாத்திரம் கொண்ட தீவிர பழைமைவாத யூதர்களை உள்ளடக்கியதாகும். இந்தப் படையினர் கடந்த 2022 ஜனவரியில் மேற்குக் கரையில் 80 வயது பலஸ்தீன அமெரிக்கரான ஒமர் அஸாத் என்பவரை தடுத்தபோது மரணித்த சம்பவம் உட்பட பல உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படுகிறது.

## இந்தியாவின் ஏவுகணைகள் பிலிப்பைன்ஸை அடைந்தன

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஆயுதப்படைகளை நவீனப்படுத்தவென இந்தியா 'பிரம்மோஸ்' சுப்பர்சொனிக் குரூஸ் ஏவுகணைகளை வழங்கியுள்ளது. இந்த ஏவுகணைக் கட்டமைப்பு கடந்த வாரப் பிற்பகுதியில் பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவை வந்தடைந்ததாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரு நாட்டு அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள இந்த ஏவுகணைக் கட்டமைப்பு, மூன்று ஏவுகணை பட்டறிகள், இயக்குனர், பராமரிப்பாளர் மற்றும் ஒரு ஒருங்கிணைந்த தளபாட ஒத்துழைப்பு பொதி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

பிலிப்பைன்ஸும் அமெரிக்காவும் 'பலிகட்டான் 2024' போர்ப்பயிற்சியைத் ஆரம்பிக்கும் முன்னர் இந்தியாவின் போக்குவரத்து விமானங்கள் மூலம் இந்த ஏவுகணை கட்டமைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தென் சீனக் கடற் பிராந்தி




யத்தியத்திலுள்ள இரண்டு தீவுகள் தொடர்பில் சீனாவுக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளன. இவ்வாறான சூழலில் வழங்கப்பட்டுள்ள இந்த ஏவுகணைகள் பிலிப்பைன்ஸின் தற்காப்பு திறன்களை மேம்படுத்துவதற்கான மூலோபாய நடவடிக்கையாக நோக்கப்படுவதாகவும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

# காசாவில் பாரிய புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட உடல்கள் 210 ஆக உயர்வு

## ரபா மீது இஸ்ரேல் தொடர்ந்தும் தீவிர தாக்குதல்

காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து குண்டு மழை பொழிந்து வரும் நிலையில், இஸ்ரேலிய படைகள் வாபஸ் பெற்ற பின்னர் கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவ வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கை 210 ஆக அதிகரித்துள்ளது.

காசாவின் தென் முனையில் பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக இருக்கும் ரபா மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்றும் தொடர்ந்து நடத்திய தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி இஸ்ரேலிய துருப்புகள் மருத்துவ வளாகத்தில் இருந்து வெளியேறிய நிலையில் கடந்த சனிக்கிழமையே இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு சிவில் பாதுகாப்பு பணியாளர்கள் கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.



மருத்துவமனை முற்றவெளியில் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள் மற்றும் துணை மருத்துவர்கள் பாரிய புதைகுழியில் இருந்து உடல்களை மீட்டு வருவதாக அங்கிருக்கும் அல் ஜசீரா செய்தியாளர் விபரித்துள்ளார். இதில் வயதான பெண்கள், சிறுவர்கள் மற்றும் இளம் ஆண்களின் உடல்களும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செய்தி கிடைத்ததை அடுத்து தனது கணவரைத் தேடி குடியிருப்பாளரான உம் முஹமது அல் ஹரசீன் மருத்துவமனைக்கு விரைந்துள்ளார். ஒரு மாதத்திற்கு முன் இஸ்ரேலியப் படை கான் யூனிஸுக்குள் நுழைந்தபோது அவர் காணாமல்போயுள்ளார். 'நாம் அவரை தேடி வருகின்றபோதும் எந்தப் பயனும் இல்லை' என்றார்.

முன்னதாக காசா பகுதியின் மிகப் பெரிய மருத்துவமனையான அல் ஷிபாவில் இரண்டு வாரம் முற்றுகையை நடத்திய இஸ்ரேலிய இராணுவம் அங்கிருந்து வாபஸ் பெற்ற பின்னர் அங்கும் பாரிய புதைகுழி ஒன்று கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை காசாவில் இஸ்ரேல் தரைப்படை இன்னும் நுழையாத இடமாக உள்ள ரபா மீது தினசரி தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. நேற்று இரு வீடுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 16 சிறுவர்கள் மற்றும் 6 பெண்கள் உட்பட 26 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.

'சிறுவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் செய்த பாவம் என்ன?' என்று உறவினர் ஒருவரான உம் கரீத் கேள்வி எழுப்பினார்.

தனது மகள் ரஷா மற்றும் இளையவருக்கு 18 மாதங்களே ஆகும் அவளது ஆறு குழந்தைகள் கொல்லப்பட்டவர்களில் இருப்பதாக முஹமது அல் பெஹைரி என்பவர் தெரிவித்துள்ளார். பெண் ஒருவர் மற்றும் அவரது மூன்று குழந்தைகள் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக அவர் நேற்று குறிப்பிட்டார்.

யூதர்கள் பாஸ்கா பண்டிகையை கொண்டாடும் நிலையில், காசாவில் ஹமாஸுக்கு மேலும் இழப்புகள் மற்றும் வலியை கொடுக்கப்போவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதி அளித்துள்ளார்.

'எதிர்வரும் நாட்களில் ஹமாஸுக்கு எதிரான இராணுவம் மற்றும் இராஜதந்திர அழுத்தங்களை நாம் அதிகரிப்போம். எமது பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான ஒரே வழியாக அது உள்ளது' என்று வீடியோ அறிக்கை ஒன்றை வெளியிட்டு நெதன்யாகு தெரிவித்தார். காசாவில் தொடர்ந்து 129 பணயக்கைதிகள் இருப்பாக இஸ்ரேல் கணிப்பதோடு இவர்களில் 34 பேர் மரணித்திருப்பதாக நம்பப்படுகிறது.

இவர்களில் சிலர் ரபாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் இராணுவம் குற்றம்சாட்டும் நிலையிலேயே அந்த நகரின் மீது படையெடுக்கும் திட்டத்தை அந்த இராணுவம் தொடர்ந்து கூறி வருகிறது. காசா போரினால் இடம்பெயர்ந்த சுமார் 1.5 மில்லியன் பலஸ்தீனர்கள் காசாவில் நிரம்பி வழிகின்றனர். இது காசா மக்கள் தொகையில் பாதி எண்ணிக்கையாக உள்ளது.

இந்நிலையில் போரின் அடுத்த கட்டத்திற்கு படை பிரதானி ஒப்புதல் அளித்திருப்பதாக இஸ்ரேல் இராணுவ பேச்சாளர் குறிப்பிட்ட போதும் அது தொடர்பான விபரம் வெளியிடப்படவில்லை.

இதேநேரம் 199 ஆவது நாளாக காசா மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக மத்திய காசாவில் நுஸைரத் அகதி முகாம், புரைஜ் அகதி முகாமின் மீது வான் தாக்குதல்களை நடத்திய இஸ்ரேல், புரைஜ் அகதி முகாமில் இருக்கும் பள்ளிவாசல் ஒன்று இலக்கு வைக்கப்பட்டதில் பலர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 34,151 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் காயமடைந்தோர் எண்ணிக்கை 77,084 ஆக உயர்ந்துள்ளதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது.

எனினும் மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக நம்பப்படும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை இதனை விடவும் அதிகம் என்று அஞ்சப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் 14,500க்கும் அதிகமான சிறுவர்கள் மற்றும் 9,500 பெண்கள் வரை இருப்பதாக காசா ஊடக அலுவலக தெரிவித்துள்ளது.

## இஸ்ரேல் இராணுவ உளவு பிரிவுத் தலைவர் இராஜினாமா

பலஸ்தீன போராளிகள் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை தடுப்பதற்கு தவறியது தொடர்பில் பொறுப்பேற்ற இஸ்ரேல் இராணுவ உளவுப் பிரிவு தலைவர் மேஜர் ஜெனரல் அஹரோன் ஹலிவா இராஜினாமா செய்துள்ளார்.



காசா போரைத் தூண்டிய இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்பதாக அவர் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த நிலையிலேயே இந்த இராஜினாமா இடம்பெற்றுள்ளது.

'அந்த கறுப்பு நாளை நான் என்னுடன் சுமந்திருக்கிறேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இரவிலும் போரின் பயங்கர வலியை எப்போதும் என்னுடன் சுமப்பேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பதவி விலகும் முதல் இஸ்ரேலிய மூத்த அதிகாரியாகவும் இவர் உள்ளார்.

நூற்றுக்கணக்கான பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலுக்குள் ஊடுருவி நடத்திய இந்தத் தாக்குதல் தொடர்பில் வந்த பல எச்சரிக்கைகளையும் இஸ்ரேலிய இராணுவம் மற்றும் உளவுப் பிரிவு தவறவிட்டது அல்லது பொருட்படுத்தவில்லை என்று குற்றம்சாட்டப்பட்டது.

காசா எல்லையில் இருக்கும் இராணுவ முகாம்கள் மற்றும் பகுதிகள் மீதே பலஸ்தீன போராளிகள் தாக்குதல் நடத்தி இருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொறுப்பேற்க இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மறுத்த நிலையில், இந்தத் தாக்குதலை தடுக்க தவறியது தொடர்பில் பெரும்பாலான இஸ்ரேலியர்கள் நெதன்யாகு மீதே குற்றம்சாட்டுவதாக அண்மைய கருத்துக் கணிப்பு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

பலஸ்தீன போராளிகள் நடத்திய இந்த எதிர்பாராத தாக்குதலில். 1,170 பேர் கொல்லப்பட்டதோடு 250 பேர் வரை பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டதாக இஸ்ரேல் கூறியது. தொடர்ந்து 129 பேர் வரை காசாவில் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.